மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
கோபிகா
ஆடையகம்
4, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரிகம்!!
அதிக்க ஆடைகளில்
சே பிக்க கோபிராஜ்
கோபிகா
ஆடையகம்
4, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 29 வெள்ளிக்கிழமை (13 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 48

## புலிகள் - படையினர் தளபதிகள் திருமலையில் நேற்று சந்திப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 13

போர் இடைநிறுத்தம் நடைமுறைக்கு வந்ததை அடுத்து —

விடுதலைப் புலிகளின் தளபதிகளும், ஸ்ரீலங்கா இராணுவத் தளபதிகளும் நேற்று திருமலையில் சந்தித்து கலந்துரையாடினர் என்று "புலிகளின் குரல்" வானொலி அறிவித்தது.

இராணுவத் தரப்பில் பிரிகேடியர் சந்திபொல, பிரிகேடியர் பிரகாஷ் மற்றும் கேர்ணல் கந்தமான், கப்டன் பண்டார, கப்டன் மொகைதீன், லெப்டினன்ட் ரூபசிங்க, லெப்டினன்ட் ஜகாத் ஆகியோரும் —

விடுதலைப் புலிகளின் தரப்பில் தளபதி ரூபன் மற்றும் சுதாகர் ஆகியோரும் நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமக்கிடையே போர் இடைநிறுத்த மீறல்கள் இடம் பெறாது எவ்வாறு தவிர்த்துக் கொள்வது என்பது பற்றி இருதரப்பினரும் சிலமணி நேரம் தொடர்ந்து உரையாடி கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-4]

## வடபகுதி கண்காணிப்பு குழுக்களில் கனடா, நெதர்லாந்து பிரதிநிதிகள்

### வார இறுதியில் இயங்கும் என அறிவிப்பு

கொழும்பு, ஜன. 13

வடபகுதியில் கடமையாற்ற உள்ள நான்கு போர் இடைநிறுத்த கண்காணிப்புக் குழுக்களுக்கு கனடா, நெதர்லாந்து நாடுகளின் பிரதிநிதிகள் தலைமை வகிக்க உள்ளனர்.

அந்த இரு நாடுகளின் பிரதிநிதிகளும் இன்னும் இலங்கை வந்து சேரவில்லை.

அவர்கள் இலங்கை வந்து சேர்ந்ததும் நான்கு கண்காணிப்புக் குழுக்களும் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

கிழக்கில் இரண்டும், வடக்கில் நான்குமாக மொத்தம் ஆறு கண்காணிப்புக் குழுக்கள் இயங்க இருப்பது தெரிந்ததே.

வடபகுதிக்கான கண்காணிப்புக் குழுக்கள் ஞாயிற்றுக்கிழமை வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-ஐ-க-4)

# போர் இடைநிறுத்தம் நீடிக்கும்; சந்திரிகாவின் நம்பிக்கை இது!

## கிழக்கில் கண்காணிப்பு குழு இன்று முதல் செயற்படும்

கொழும்பு, ஜன. 13

கிழக்கில் திருகோணமலையிலும், மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளிலும் போர் இடைநிறுத்தத்தை கண்காணிக்க நியமிக்கப்பட்ட இரு குழுக்களும் இன்றுமுதல் இயங்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேயைச் சேர்ந்த ஒடின் பேர்வ், ஜோன் கப்ரியல்ஸன் ஆகியோர் இக் குழுக்களுக்கு தலைமை வகிக்கின்றனர்.

இவர்கள் இருவரும் முன்னர் யூகோஸ்லாவியா, லெபனான் ஆகிய நாடுகளில் கடமையாற்றியவர்கள் என்றும்—

யுத்த நிறுத்த ஒப்பந்தங்களை அமுல் செய்வதில் அனுபவம் வாய்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-க-ஐ-4-6)



அரசியல் என்றாலே சிக்கல் தான் பாருங்கோ......!

## கிழக்கில் கண்காணிப்புக் குழுக்களின் உறுப்பினருடன் நேற்று சந்திப்பு

கொழும்பு, ஜனவரி 13

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரச படைகளுக்கும் இடையில் தற்போது அமுலில் இருந்து வரும் போர் இடை நிறுத்தம் மேலும் நீடிக்கும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று நம்பிக்கை தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையிலும், மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிகளிலும் போர் இடை நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு நியமிக்கப்பட்ட இரு கண்காணிப்புக் குழுக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதி இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார்.

இந்தக் கண்காணிப்புக் குழுக்களுக்கு முறையே நோர்வேயைச் சேர்ந்த ஒடின்பேர்வ் மற்றும் ஜோன் கப்ரியல்ஸன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர். இவர்களும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

போர் இடை நிறுத்தம் அமுல் செய்யப்படும் விதம் குறித்து ஜனாதிபதி திருப்தி தெரிவித்தார்.

ஐந்தாவது நாளான நேற்று வரை குறிப்பிடத்தக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கிளாலி-பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம். ஜன. 13

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(ஐ)

## அரசாங்க தரப்பு பிரதிநிதிகள் விவரம்

கொழும்பு, ஜன. 13

கிழக்கில் திருகோணமலை மாவட்டத்திலும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் போர் இடை நிறுத்தத்தைக் கண்காணிக்க அரச தரப்பினால் நியமிக்கப் பட்டுள்ளோர். விவரம்:-

டாக்டர் எம்.ஐ.எம். முஸ்ஸீர், ஒய்வுபெற்ற மாவட்ட நீதிபதிகளான எரிக் பொன்சேகா, பற்றிக் பெர்னாண்டோ, ஒய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகளான பரி உணக்குவ, ஏ. ஆர். மொறிஸ் பெரேரா, கொழும்புப் பல் கலைக்கழக கலை பீடாதிபதி பேராசிரியர் கே. ஆரியரத்தினா, ஒய்வு பெற்ற நூலகப் பொறுப்பாளர் அமரதாஸ பெர்னாண்டோ ஒய்வு பெற்ற நிர்வாக சேவை அதிகாரியான சோமபால குணதிர.

(இ-க-ஐ-4-6)

## படையினர் ஒரு வேட்டும் தீர்க்கவில்லையாம்

### அனுருத்த ரத்வத்தை கூறுகிறார்

கொழும்பு, ஜன. 13

போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வந்த கடந்த சனி நள்ளிரவுக்குப்பின் படையினர் ஒரு துப்பாக்கி வேட்டைக்கூட தீர்க்கவில்லை என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கடந்த ஐந்து நாட்கள் போர் இடைநிறுத்தம் வெற்றியளித்திருப்பதாகவும் அது இரண்டு வாரங்களுக்கு மேலும் தொடரும் எனத் தான் நம்புவதாகவும் அவர் கூறினார்.

(இ-ஐ-6)

## சரக்கு கப்பல் சேவை

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே தனியார் சரக்கு கப்பல் சேவை இந்த மாதத்திலிருந்து தொடக்கப் படவுள்ளது.

(இ-4)

# 2ஆம்கட்ட பேச்சில்கலந்துகொண்ட அதே குழுவே நாளையும் வருகிறது

### இன்று ஜனாதிபதியுடன் முக்கிய ஆலோசனை

யாழ்ப்பாணம். ஜன. 13

அரச தரப்பில் 2 ஆம் கட்டப் பேச்சில் கலந்து கொண்ட அதே பிரதிநிதிகளே நாளை நடைபெற உள்ள 3ஆம் கட்டப் பேச்சிலும் கலந்து கொள்ள உள்ளனர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் நாளை காலை இரத்மலானையில் இருந்து விமான மூலம் பலாலி வந்து சேருவார்கள்.

அங்கிருந்து ஹெலி மூலம் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டிய விடயங்கள் குறித்து அரச தரப்புப் பிரதிநிதிகளுக்கு விவரிக்கும் வகையில் இன்று உயர்மட்ட மாநாடு ஒன்றை ஜனாதிபதி கூட்ட இருப்பதாகவும்—

இதில் முப்படை தளபதிகளும் பங்கு பற்றவுள்ளனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் கே பாலபட்டபெண்டி, இலங்கை வங்கித் தலைவர் திரு. ராஜன் ஆசீர்வாதம், கட்டடக்கலை நிபுணர் திரு. நவின் குணரட்ன, மற்றும் படை அதிகாரிகளான பிரிகேடியர் ஏ. எவ். சிறி பீரிஸ், கப்டன் பிரசன்னா ராஜரட்ன ஆகியோர் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற 2 ஆம் கட்டப்பேச்சுக்களில் அரச தரப்புச் சார்பில் கலந்து கொண்டது தெரிந்ததே.

(இ-3)

## தனி ஹெலிக்கொப்டரில் செய்தியாளர்கள் வருவர்

யாழ்ப்பாணம், ஜன. 13

நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் 3 ஆம் கட்டப் பேச்சுக்கள் தொடர்பான செய்திகளை சேகரிக்க உள்நாட்டு வெளிநாட்டு செய்தியாளர்கள் 40 பேர் அடங்கிய குழு நாளை சனி காலை ஹெலி மூலம் யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து விமான மூலம் பலாலி வரும் இவர்கள் அங்கிருந்து ஹெலி மூலம் யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள்.

அன்று மாலையே அவர்கள் கொழும்பு திரும்ப ஏற்பாடாகி உள்ளது.

அரச குழுவினர் யாழ். வருவதற்கு முன்னர் செய்தியாளர் குழு யாழ். வந்து சேரும்.

(இ-3)

## கடற்படைக் கப்பலுடன் மோதிய இழுவைப்படகு!

### கற்பிட்டிக் கடலில் சம்பவம்

கற்பிட்டிக் கடலில் இழுவைப்படகு ஒன்று கடற்படையின் ரோந்துக் கப்பல் ஒன்றுடன் மோதியதில் அந்த இழுவைப் படகு பலத்த சேதமடைந்தது.

இழுவைப்படகுக்கு10லட்சம் ரூபாவுக்கு மேலான சேதம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டது.

இச் சம்பவம் கடந்தவாரம் வியாழக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இடம் பெற்றது

(ஐ-க)

## அரசியல் பேச்சின்போது பிரச்சினை எழலாம்

### அனுருத்த ரத்வத்தை கூறுகிறார்

கொழும்பு, ஜன. 13

அரச தரப்பினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுமுகமான சூழ்நிலை நிலவுவதால் போர் இடைநிறுத்தம் குழம்புவதற்கு இடமில்லை. ஆனால் அரசியல் விவகாரம் ஆராயப்படும் போது பிரச்சினைகள் எழலாம்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேர்ணல் அனுருத்த ரத்வத்தை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்காணிப்புக் குழுவினர் தமக்குத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் குறித்தே ஆராய்வார்கள் என்றும்—

சம்பவங்கள் நடைபெறுகின்றனவா என்பதைக் கண்டறிய அவர்கள் அந்த இடங்களுக்குச் செல்ல மாட்டார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது அமுலில் உள்ள [illegible]

([illegible] ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ காவல்துறைப் பணிமனை மன்னாரில் திறந்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 13

தமிழீழ காவல்துறையின் மன்னார் காவல் பணிமனை நேற்று முற்பகல் 10 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட தளபதி திரு. வஷ்மன் நாடாவை வெட்டி காவல்பணிமனையை திறந்து வைத்தார்.

விழாவில் மங்கள விளக்கை மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. டென்சில், நீதிநிர்வாகத் துறையின் வன்னி பிராந்தி பொறுப்பாளர் திரு. சாந்தன் ஆகியோர் ஏற்றினர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினி தலைவர் யாழ். வருகை

யாழ்ப்பாணம். ஜன. 13

ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் திரு. எஸ். வசந்தராஜா நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்

அவருடன் அவரது மனைவியாரும் வந்துள்ளார்.

விமானமூலம் பலாலி வந்த அவர்கள் கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

(இ-3)

## பாப்பரசரை தரிசிக்க பிரயாண ஒழுங்குகள்

### புலிகள் சலுகைக் கட்டணம்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ். குடா நாட்டு மக்கள் பாப்பரசரைத் தரிசிப்பதற்கு கொழும்பு செல்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் சலுகைக் கட்டணத்தில் பிரயாண ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

இம்மாதம் 18 ஆம் திகதி யாழ். நகரிலிருந்து கிளாலி படகுத்துறை வரையிலான வாகனப் போக்குவரத்து —

கிளாலி படகுத் துறையிலிருந்து ஆலங்கேணி வரையுமான படகுப் பிரயாணம் —

ஆலங்கேணியிலிருந்து ஓமந்தை வரையுமான வாகனப் போக்கு வரத்து — ஆகியவற்றுக்கான ஏற்பாடுகள் குறைந்த போக்கு வரத்துக் கட்டணத்துடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்று பிலிப்பீன்ஸ் வந்தடைந்த பாப்பரசருக்கு மகத்தான வரவேற்பு

மணிலா, ஜன. 13

பாப்பரசர் நேற்று பிலிப்பீன்ஸின் தலைநகர் மணிலா வந்து சேர்ந்தார்.

இத்தாலி தலைநகர் றோம் [illegible] நேற்று முன் தினம் இரவு 10 மணிக்கு சிறப்பு விமானத்தில் புறப்பட்ட பாப்பரசர் சுமார் 17 மணி நேர பயணத்துக்குப் பின்னர் பிலிப்பீன்ஸ் நேரப்படி நேற்று பிற்பகல் 5மணிக்கு மணிலா வந்து சேர்ந்தார்.

பாப்பரசரை வரவேற்க காலையில் இருந்தே பெருந்திரளான மக்கள் விமான நிலையத்தில் கூடியிருந்தனர்.

மணிலா வந்தடைந்த பாப்பரசரை பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பிடல் ராமோஸ் தனது மனைவி சகிதம் விமான நிலையம் சென்று வரவேற்றார்.

(6 ஆம் பக்கமும் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்
கொத்தணிகளின்
அங்கத்தவர், பணியாளர்களுக்கான

## அறிவித்தல்

புனரமைப்பு, புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு ஏதுவுடையதாக 1990ஜூன் மாதத்தின் பின் எமது பிரதேசத்தில் இடம்பெற்ற இராணுவ தாக்குதல்களால் பாதிப்படைந்த எமது அங்கத்தவர்கள், பணியாளர்கள் பாதிப்பின் முழுமையான விவரங்களையும் உரிய ஆதாரத்துடன் தத்தமது சங்கங்களில் வழங்கிக் கொள்ளவும். இடம் பெயர்ந்துள்ளவர்களும் இவ் விவரங்களை தத்தம் உறுப்புரிமைச் சங்கங்களில் சமர்ப்பிக்கவும். விவரம் வழங்க வேண்டிய இறுதி திகதி: 31-01-1995

பொதுமுகாமையாளர்,
வடமாகாண பனை, தென்னை
வ அ கூ.ச. சமாசம்,
499, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/151)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 02 — 09 — 1987

உதிர்வு: 25 — 12 — 1993

வேலணை 1 ஆம் வட்டாரம்
**சிவகுமாரன் தனுஷியா**
(O. L. R. மாணவி)

**திதி: 13 · 01 · 1995**

அன்னை பூமிவிட்டு ஆண்டவன் அரவணைப்பிற்குள் எம்மைப் பிரிந்துசென்ற எம் பிரிய செல்வமே தனு; மாலை உணவு முடித்து நீ தலையணையில் உறங்க, இந்நாள் உனது இறுதிநாள் ஆகியதோ. இறைமகன் கிறிஸ்து பிறந்த நாளில் நீ துயில்எழும்ப மறந்ததேன். உன் நினைவில் வருஷமொன்று ஓடிவிட்டது. தனு மழலை போனபின்னே எம் வாழ்க்கைதான் இனித்திடுமோ?

உன் துயநினைவில் தினமும் வாடும்:
உன் அம்மா, அப்பா, அம்மம்மா,
பெரியமாமா குடும்பத்தினர் (கடை)
பெரியம்மா குடும்பத்தினர் (கிளிநொச்சி)
நாதன் மாமா ஜேர்மனி)
மாமா அன்ரி குடும்பத்தினர் (ஜேர்மனி)
வவா அத்தை (போசாலி)
அன்பழகன் அண்ணா (யாழ்ப்பாணம்)
தவம் மாமா குடும்பத்தினர் (கொழும்பு)
உன் உடன்பிறப்புக்கள் குமுதினிஅக்கா, யாழி அக்கா, தர்ஷினி அக்கா, கஜன் அண்ணா, அஜன் தம்பி.

S. Arumukanathan,
Heiligerweg - 60,
44135 - Dortmund,
GERMANY.

தகவல்: ச. சிவகுமாரன்,
29, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். (34684)

விராட் விஸ்வப் பிரம்மனே நம

12 ஆவது ஆண்டு

## நினைவு தினம்



அமரர்
**சிவன் முருகன் ஆச்சாரி**
[முருகன் ஆபரண மகால் — சுன்னாகம்]

ஜெனனம்: 09-03-1931
சிவபதம்: 27 12 -1982

திதி: 13-01-1995

எம்மை விட்டுப்பிரிந்து பன்னிரண்டு ஆண்டு ஆகியும் எங்கள் இதயம் விட்டகலாத உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இனிதே பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

இல. 38
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(சி/5768)

# உலகத் தமிழாராய்ச்சி மன்றம்
# இரண்டாகப் பிளவுபடும் சாத்தியம்

லண்டன், ஜன. 13

உலகத் தமிழாராய்ச்சி மன்றம் இரண்டாகப் பிளவுபடும் நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் —

விரைவில் தனியான ஒரு தமிழ் மாநாட்டை கொழும்பில் நடத்தப்போவதாகவும் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கை பிரிவு அதன் தலைவருக்கு அறிவித்திருப்பதை அடுத்தே உலக தமிழாராய்ச்சி மன்றம் இரண்டாகப் பிளவுபடும் நிலை உருவாகியுள்ளது என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

இது தொடர்பாக பி. பி. ஸி. தமிழோசையில் வெளியான தகவல்கள் வருமாறு:-

இலங்கைத் தமிழ் அறிஞர்களான க. பொ. இரத்தினம், பேராசிரியர் தனிநாயகம் அடிகள் ஆகிய இருவரது சிந்தையில் உதித்த எண்ணக் கருவே உலகத் தமிழாராய்ச்சி மன்றம் ஆகும்.

1964ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் திகதி டில்லி பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் சாலை இளந்திரையனின் இல்லத்தில் இந்த மூன்று அறிஞர்களும் சந்தித்தபோது இந்தக் கரு உருவானது.

முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு 1966ஆம் ஆண்டு மலேஷியாவின் கோலாலம்பூர் நகரில் தனிநாயகம் அடிகளின் தலைமையிலான தமிழாராய்ச்சி மன்றத்தினால் நடத்தப்பட்டது.

அதன் பின்னர் நடந்த பல மாநாடுகளிலும் இலங்கை அறிஞர்கள் பெரும் பங்காற்றி இருந்தனர்.

### 200 அறிஞர்களை அனுப்பத் திட்டம்

அ. தி. மு. க அரசு மாநாடு என்று கூறப்பட்ட தஞ்சை தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு இருநூறு அறிஞர்களை அனுப்ப இலங்கை அரசு திட்டமிட்டிருந்தது.

அவர்கள் அனைவரையும் ஓர் தனிவிமானத்தில் அனுப்பி வைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணங்கியிருந்தார்.

ஆனால் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கை அறிஞர்கள் கொடுத்த விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இறுதியில் ஏதோ ஒரு மாதிரி மாநாட்டுக்கு வந்து சேர்ந்த 4 இலங்கை தமிழ் அறிஞர்களும் திருப்பி அனுப்பப்பட்டனர்.

அமைச்சர் தொண்டமான் தலைமையில் இலங்கையில் இருந்து சென்ற 11பேர் அடங்கிய இலங்கைக் குழுவு மாநாட்டை ஒட்டி நடந்த கலாசார நிகழ்ச்சிகளில் மட்டுமே கலந்துகொண்டது. ஆய்வு நிகழ்ச்சிகள் எதிலும் இலங்கைக் குழு கலந்து கொள்ளவில்லை.

உலக தமிழாராய்ச்சி மன்ற நிர்வாக பதவிகளுக்காக நடத்தப்பட்ட தேர்தல்களை ஏற்றுக்கொள்ளவும் தமிழாராய்ச்சி மன்ற இலங்கை பிரிவு மறுத்துள்ளது.

இலங்கைப்பிரிவின் அனுமதி பெறப்படாமல் தமிழ் அறிஞரான பேராசிரியர் கே. வேலுப்பிள்ளை பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவரது இடத்துக்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அதுவும் அவர் அங்கு சமுகமளித்திராத நிலையில்.

ஒன்பதாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை பிரிட்டனில் அல்லது அமெரிக்காவில் அல்லது தென்னாபிரிக்காவில் நடத்துவது என மன்றத்தின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஆனால் ஒன்பதாவது மாநாட்டை கொழும்பில் நடத்த வேண்டும் என்று இலங்கைப் பிரிவு கோரியுள்ளது.

இலங்கைப் பிரிவின் இக் கோரிக்கை நிறைவேற்றப் படாவிட்டால் 30 வயதை பூர்த்தி செய்யவுள்ள உலகத் தமிழராய்ச்சி மன்றம் பிரிந்து போகும் சாத்தியம் உண்டு.

# தாஜ் சமுத்திராவில் ரணில் திருமணம்

கொழும்பு காலிமுகப் பகுதியில் உள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் திருமணம் நேற்று முன் தினம் பிற்பகல் நடைபெற்றது. (இ-ஐ-6)

# விவசாயிகளுக்கு மீண்டும் துப்பாக்கி வழங்க முடிவு

கொழும்பு, ஜன. 13

விவசாயிகளுக்கு மீண்டும் துப்பாக்கி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஆண்டுக்கு ஒரு தடவை அவர்கள் துப்பாக்கிக்கான அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனையில் அனுமதி வழங்கப்பட உள்ளது.

விவசாய காணி, வனவள அபிவிருத்தி அமைச்சர் டி. எம். ஜயரத்ன கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இதனைத் தெரிவித்தார். [க]

# குப்பை புதைக்க இணக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ். மாநகரப் பகுதியில் உள்ள குப்பைகள் மற்றும் கழிவுப் பொருள்களை காக்கைதீவுப் பகுதியில் புதைப்பதற்கு அப்பகுதி மக்கள் மீண்டும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய மாநகராட்சி மன்றம் காக்கைதீவில் மாநகரசபைக்கு சொந்தமான நிலப்பரப்பில் கழிவுப் பொருள்களை புதைக்கும் பணியை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

கடந்த வாரம் இப்பகுதி மக்கள் கழிவுப் பொருள்களை புதைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து மாநகராட்சி மன்றத்தின் கழிவுகளை அகற்றும் பணிகள் பாதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. [க.17]

## விக்னா
கல்வி நிறுவனம்

94 பரீட்சை எடுத்தவர்க்கான

மீட்டல்

இந்து நாகரிகம்:
8 - 9 மணி

இந்துசமயம்:
10 - 11மணி

திரு. காரை சுந்தரம்பிள்ளை

அரசியல்:
9 - 10 மணி

திரு. சிலன்

**ஆரம்பம்: 14 - 01 - 95**

(சி- 288)

# கிராம உத்தியோகத்தர் லஞ்சம் வாங்கியதாக கைது

லஞ்ச ஊழல் விசாரணை ஆணையாளர் அலுவலக அதிகாரிகள் கிராம உத்தியோகத்தர் ஒருவரையும் அவரது உதவியாளரையும் கைது செய்துள்ளார்கள்.

பொலன்னறுவையில் பாடசாலை ஒன்றில் பிள்ளையைச் சேர்ப்பதற்காக, வதிவிட உறுதிச் சான்றிதழை வழங்குவதற்கு இந்த கிராம உத்தியோகத்தரும் உதவியாளரும் பிள்ளையின் பெற்றோரிடம் 150 ரூபாவை லஞ்சமாக பெற்றார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது (இ-4)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

1995.01.14ம் திகதி நடைபெறவுள்ள தொழிலாளி தரம் III பதவிக்கான பொதுவுளச் சார்புப் பரீட்சை

மேற்படி பரீட்சைசுட்டெண் 0001 இலிருந்து 0400 வரையுள்ள பரீட்சார்த்திகளுக்கு திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும், மீதியான சுட்டெண்களையுடைய பரீட்சார்த்திகளுக்கு யாழ். பல்கலைக்கழக பிரதான மண்டபங்களிலும் பரீட்சை நடைபெறுமென்பதை அறியத் தருகின்றேன்.

தேசிய அடையாள அட்டை கடவுச்சீட்டு அல்லது கிராம சேவக உத்தியோகத்தருடாக பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படம் மட்டுமே உங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

வேறு எந்த ஆவணங்களும் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பதிவாளர்
[சி-159]

# ஓய்வு பெறும் ஆசிரியர்களை ஒதுக்கிவிடாதீர்!
# ஒப்பற்ற மூலவளம் அதனால் விரயமாகிவிடும்!!

### ஆற்றல் மிக்க ஆசிரிய வாண்மை அவசியம்

இன்று கல்விக்காக காத்திருக்கும்— ஏங்கிநிற்கும்— மாணவ சமுத்திரத்தின் கோரிக்கைகள் மிக நெருக்கடியான நிலையை அடைந்துவிட்டன. மாணவரின் தேவைகளையும் கோரிக்கைகளையும் நிறைவேற்றப் போதுமான அளவு மூலவளங்கள் எம்மிடம் இல்லை.

வளர்ச்சியடைந்த நாடுகளில் மாணவர்களின் கல்வியை நிறைவேற்ற எத்தனையோ நவீன சாதனங்கள் ஆசிரியருடன் இணைந்து செயல்படுகின்றன. அங்கே ஏகப்பட்ட சாதனங்களால் நிறைவேற்றப்படுகின்ற பன்முகத் தொழிற்பாடுகள் அத்தனையையும் நிறைவேற்ற, எம்மிடமுள்ள ஒரேயொரு மூலவளம் ஆசிரியர் மட்டுமே. அதனால், ஆற்றல்மிக்க ஆசிரிய வாண்மை இங்கு அவசியமாகின்றது.

### ஒப்பில்லா மூலவளம் விரயமாகின்றது

ஆற்றல்மிக்க ஆசிரிய வாண்மை எடுத்த எடுப்பில் பெறக்கூடியதொன்றல்ல; அது ஒருவரின் பட்டத்தின் மட்டத்திலும் தங்கியிருப்பதில்லை; ஒருவர் கற்றல்— கற்பித்தல் துறைகளில் விசுவாசத்துடனும் பொறுப்புணர்வுடனும் அதிதீவிரமாக ஆவேசத்துடன் ஈடுபடும்போது உள்ளிருந்து விருத்தியடைவது. அது பூரண விருத்தியடைய ஆயுட்காலம் தேவைப்படும். அவ்விருத்தியின் உச்சக்கட்டத்திலேயே எங்கள் ஆசிரியர்கள் ஓய்வுபெறுகின்றார்கள். அவர்களுடைய ஒப்புயர்வற்ற அற்புதமான ஆற்றல், அறிவு, திறன் அத்தனையும் காட்டில் எறிக்கும் நிலாவாக—பூட்டி வைக்கப்பட்ட நூலகமாக — இன்றுவரை வீணாகிக்கொண்டிருக்கின்றது. அறிவையும் திறனையும் ஏன் மனப்பாங்கினையும் அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்க வல்ல ஆற்றலைக் கடைந்தெடுத்துப் பெற்ற இவர்களை, ஓய்வுபெறும் வயதெல்லையுடன் நாமும் இணைந்து தூக்கிவிடத் தீர்ப்பளித்து விடுகின்றோம்.

இதனால் ஒப்பில்லா மூலவளம் ஒன்று — நியமம் ஒன்று — ஆற்றிலே கரைகின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

### பூரணத்துவம் அடைந்தவர்கள்

ஆசிரியர்கள் ஆசிரிய கலாசாலையிலோ அல்லது [illegible] டப்பின் டிப்ளோமா'' ஆக்கப்படுவதில்லை. பிள்ளைப் பருவம், கல்விப் பருவம் ஆகியவற்றினூடாக ஒருவர் செல்லும்போது — நாலா பக்கங்களிலுமிருந்து அனுபவங்களை ஒருவர் பெறும்போது— உலகை ஒருவர் உற்றுநோக்கும்போது அவர் ஆசிரியராக ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார். அதாவது எப்பொழுது தொடர்பும் ஈடுபாடும் ஒருவருக்கு இன்னொருவருடன் ஏற்படுகின்றதோ அப்பொழுதே ஆசிரிய ஆக்கம் ஆரம்பிக்கின்றது. பயிற்சிகளும் ''பட்டப்பின் டிப்ளோமாக்களும்'' அங்ஙனம் ஆக்கம் பெறும் ஆசிரியரைப் புடமிடும் மையங்களாக அமையலாம். ஈடுபாடுகளையும் தொடர்புகளையும் பெருமளவில் பெற்றர்களாகையால் ஓய்வுபெறும் ஆசிரியர்கள் ஆசிரியவாண்மையில் பூரணத்துவம் அடைந்தவர்களே.

### நிபுணத்துவம் பெற்றவர்கள்

ஆசிரியரின் நிபுணத்துவம் அவர்களுக்குத் தெரிந்த பாடப்பரப்பின் அளவில் தங்கியிருப்பதில்லை. கல்வியின் உட்பொருள் காண்பதிலேயே தங்கியுள்ளது. தேவையான பாட அறிவைப் பெருக்க அதிக காலந்தேவையில்லை. ஆனால், கல்வி கல்வித்திட்டங்கள், கல்விக்கொள்கைகள், கல்வித் தத்துவங்கள் பற்றிய உட்பொருள் விளக்கம் காலத்துடன் கூடுவது மட்டுமன்றி மாறுவதுங்கூட. ஓய்வுபெறும் ஆசிரியர்கள் காலங்கண்டவர்கள்; கல்வியின் உட்பொருள் விளங்கியவர்கள்; அபிவிருத்திக்கு அவசியமான அடிப்படைக் காரணி கல்வியே என்பதை உணர்ந்தவர்கள். இன்று எதனையும் நிச்சயிக்கும் வலுமிக்க காரணி கல்வி என்பதைக் கண்டவர்கள்; பல நூற்றாண்டுகள் தேவைப்படும் அபிவிருத்தியை ஒரே பாய்ச்சலில் அடைவதற்கு கல்வியைத் தவிர வேறெதுவும் கொடுக்க மாட்டாது என்பதனை அனுபவத்தில் பெற்றவர்கள். இருந்தும் தனிநபர் தேவைகளுக்கு— சமூகத்தின் கோரிக்கைகளுக்கு— பதிலளிக்க கல்வி தவறுமாயின் சமூக, பொருளாதார, பண்பாட்டு அபிவிருத்திகளுக்கு தடையாகவும் கல்வி மாறலாம் என்பதையும் அனுபவத்தில் கண்டவர்கள்.

ஓய்வு பெறுபவர் [illegible] எல்லோரும் [illegible] ஓய்வுபெறும் ஆசிரியர்கள் எல்லோரும் வளவாய்ப்புடையவர்கள்(Potential Teachers) அல்ல. தேசத்தின் ஆசிரியர்கள் ஆவதற்கு மிகப்பொருத்தமானவர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் சேவைக்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. கல்வித்தராதரப் பத்திரம் ஒன்றை ஆசிரியர் ஆவதற்கு அனுமதிப் பத்திரமாக கையாண்டவர்களே அநேகர். அதனால் தளம்பாத ஆளுமை உடையவர்களாக, கற்பிப்பதற்கு அருட்டப்பட்டவர்களாக, உயர்ந்த அறிவாற்றல் தரம் பெற்றவர்களாக, ஓய்வுபெறும் ஆசிரியர்கள் எல்லோரும் இருப்பதில்லை. சிலர் ஓய்வுபெறும் காலத்தில் தளர்வடைந்து போவதுமுண்டு. ''அறளை'' பெயர்வதும் புதிதல்ல. வீட்டில் நன்றியுள்ள பிராணியின் இடத்தைப் பிடிப்பவருமுளர்.

### பொருத்தமானவர்களும் உளர்

எனினும் ஓய்வுபெறும் காலத்திலும் புத்திக்கூர்மை மங்காத, ஆர்வம் மழுங்காத, எதற்கும் ஈடுகொடுக்கும் ஆற்றல்குன்றாத பலரை நாம் அன்றாடம் காண்கின்றோம். இவர்களால் கல்வித்துறையில் அளப்பரிய சேவை ஆற்றமுடியும். புதிய புதிய கற்பித்தல் முறைகளையும் நுட்பங்களையும் சீர்தூக்கிப் பார்த்து ஏற்கவோ நிராகரிக்கவோ வல்லவர்கள் இவர்களே. புதிய அறிவுப் பகுதிகளின் கருத்து வளமும் பயன் வளமும் காணக்கூடிய பின்னணியைக் கொண்டவர்கள் இவர்கள். மேலாக கற்பிப்பதற்கு முழு நிறைவான அறிவும் அனுபவமும் விசேட பயிற்சியும் தேவைப்படும் மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளுக்கு இவர்களிலும் திறமையான புதியவர்கள் இருக்கமாட்டார்கள்.

### கதிரைக்கு சூடேற்ற அல்ல

எனினும் பெயருக்காக வேனும் வகுப்பில் ஆசிரியர் இருக்க வேண்டுமே என்றதற்காக ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் சேவை கோரப்படக்கூடாது. ஏதோ தளர்ந்துபோன பருவத்தில் மேலதிக வருவாய் பெற வாய்ப்பளிப்பதற்காக அவர்கள் சேவையில் அமர்த்தப்படலாகாது. பின் எதற்காக என்ற கேள்விக்கு ஆணித்தரமான காரணங்கள்.

கல்வி என்பது பின் [illegible] விருக்கும் வாழ்க்கைக்கு முந்தியதாக ஏற்படும் [illegible] என்பதை உணர்வில் பெற்றவர்கள் — கற்றலை மையமாகக் கொண்ட கற்பித்தலை கையாளும் திறன் பெற்றவர்கள் — புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்க வல்ல புதிய மனிதரை உருவாக்கும் ஆற்றல் பெற்றவர்கள் — இன்று வரை நிலவாத ஆனால் இனிமேல் தோன்றப் போகும் சமூகமொன்றுக்கு மாணவர்களைத் தயார் செய்யும் ஆற்றலும் வேண்டிய அனுபவமும் பெற்றவர்கள் — பொதுக் கல்வியின் நோக்கங்களும் கொள்கைகளும் தேசிய அபிவிருத்தி இலக்குகளையும் திட்டங்களையும் கொண்டன என்பதைக் கண்டவர்கள் — என்பதற்காகவே அவர்களின் சேவை எமக்குத் தேவையாகும்.

இல்லையெனில், ஓய்வு பெற்ற ஆசிரியர் அல்லாத அரசாங்க உத்தியோகத்தர்களை ஆசிரியர் கதிரைக்கு சூடேற்ற அரசாங்கம் அமர்த்தியது போன்று அமைந்துவிடும். ★

- படியாதவன் -

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## அறிவித்தல்

11 - 1 - 95 புதன்கிழமை அன்று வடமராட்சிக் கோட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட விசேட பொதுக் கூட்டம், அன்றைய தினம் யாழ். மாவட்ட பொது நிர்வாக சபைக் கூட்டம் இடம்பெற்றமையினால் நடத்த முடியாமல் போய்விட்டது. சிரமத்திற்கு மன்னிக்கும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

மேற்படி கூட்டம் இன்று (13 - 1 - 95) வெள்ளி பி. ப. 4 மணிக்கு மாலி சந்தி, சதாபொன்ஸ் கல்வி நிலையத்தில் கலந்துரையாடல் நடைபெற இருப்பதால் சகல கல்வி நிலைய நிர்வாகிகளும், ஆசிரியர்களும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

— பொதுச் செயலாளர்.

[சி-287]

சங்கானை
பனை தென்னை வள
அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின்

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் காரைநகர் மற்றும் ஏனைய பகுதியிலும் தொழில் புரிந்த அங்கத்தவர்கள் 1990ஆம் ஆண்டின் பின் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து ஏனைய இடங்களில் வசித்துவரும் சகல அங்கத்தவர்களும் எதிர்வரும் 17 — 01 — 1995 இல் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் சமுகமளித்து அக் காலங்களில் ஏற்பட்ட இழப்புக்கள், நட்டங்கள் தொடர்பான சகல விவரங்களையும் வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மு. கணேஷ்
தலைவர்

(34663)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செத்தல் மிளகாய், உருளைக்கிழங்கு

# இறக்குமதிக்கு அரசாங்கம் தடை!

கொழும்பு, ஜன. 13
வெளிநாடுகளில் இருந்து செத்தல் மிளகாய் உருளைக் கிழங்கு ஆகியவற்றை இறக்குமதி செய்வதை அரசு நேற்று முதல் தடை செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்தத் தடை உடனடியாக அமுல் செய்யப்படுவதாக அரசு தெரிவித்திருக்கிறது.

ஸ்ரீ சு. கட்சியின்—ஸ்ரீமாவோவின் ஆட்சிக் காலத்திலும்—மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற சில முக்கிய பொருள்களுக்கான இறக்குமதி தடை செய்யப்பட்டதும்—

அதன் மூலம் ஏராளமான விவசாயிகள் பயன் அடைந்ததும் தெரிந்தவையே.

ஐ. தே. க. ஆட்சிக்கு வந்த பின்னர் தாராள பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் இந்த உப உணவுப் பொருள்களின் இறக்குமதியை அனுமதித்திருந்தது குறிப்பிடத்தக்கது (ஒ-3)

## வேலைநிறுத்த சூத்திரதாரி இரத்மலானையில் கைது

அண்மையில் தென் பகுதியில் இடம்பெற்ற வேலை நிறுத்தங்கள் சிலவற்றுக்குப் பின்னணியில் இருந்து செயற்பட்டவர் என சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை கடந்த செவ்வாயன்று இரத்மலானையில் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபர் முன்னர் இராணுவத்தின் சிங்க ரெஜிமென்ட்டில் கடமையாற்றி மூன்று வருடங்களுக்கு முன் தலைமறைவானவர் என்று பொலீஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

## கொடி வாரம்

யாழ்ப்பாணம், ஜன. 13
நோயாளர் நலன் புரிச் சங்கம் மேற்கொள்ளும் சமூக நலத்திட்டங்களை விரிவுபடுத்தும் நோக்குடன் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை வட தமிழீழத்தில் கொடி வாரத்தினை நடத்தவுள்ளது. (ஒ)

## வெளிச்சம் வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் தைமாத இதழ் நாளை வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரனின் "காந்தரூபன் அறிவுச் சோலை பூப்பதைப் பார்க்க என் நெஞ்சு நிறைகிறது" என்ற செய்தியும் பிரம்மஞானியின் 'அர்த்தமும் அபத்தமும்' தொடர் கட்டுரையும்—

இவற்றுடன் கேணல் கிட்டுவுடன் கடலிலே காவியமான வேங்கைகளின் நினைவுகள் மற்றும் சிறப்புச் சிறுகதைகளும், புதுவை இரத்தினதுரை உட்பட பல கவிஞர்களில் இந்தக் கவிதைகளும் வேறு அம்சங்களும் இடம் பெற்றுள்ளன. (ஒ)

# பாப்பரசரை ஜனாதிபதி சந்திரிகா அலரி மாளிகையில் வரவேற்பார்

கொழும்பு, ஜன. 13
இலங்கைக்கு எதிர்வரும் 20ஆம் திகதி வருகைதரும் பரிசுத்த பாப்பரசருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது அலரிமாளிகை வாசஸ்தலத்தில் வைபவ ரீதியான வரவேற்பு ஒன்றை வழங்க இருக்கிறார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

பரிசுத்த பாப்பரசர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கும்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேரடியாக விமான நிலையத்தில் வரவேற்க முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பௌத்த பீடாதிபதிகள் பாப்பரசரின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதில்லை என அறிவித்ததை அடுத்து சந்திரிகா விமான நிலையத்தில் பாப்பரசரை வரவேற்கும் நிகழ்ச்சியை கைவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. [ஒ-3]

### பாப்பரசரை தரிசிக்க வருவோர்

## வாகனங்களுக்கு விசேட 'பாஸ்' பெற வேண்டும்

கொழும்பு, ஜன. 13
பாப்பரசரைத் தரிசிக்க வாகனங்களில் கொழும்புக்கு வருவோர் தமது கார்கள், மினி வான்கள், பஸ்கள் என்பவற்றுக்குரிய "பாஸ்"களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு அதிமேற்றிராணியார் இல்லத்தில் போக்குவரத்து கமிட்டி தலைவர் வண. ஹரன் பேரேராவிடம் முன்கூட்டியே 'பாஸ்'களை பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"பாஸ்"கள் வாகனங்களில் ஒட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் பொலீஸார் தமது பணியைச் செய்ய இந் நடவடிக்கை இலகுவாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

### பாப்பரசர் தங்க இருந்த இடத்தில்

## சந்தேகமான முறையில் நடமாடிய நபர் கைது

### பிலிப்பீன்ஸில் கடும் பாதுகாப்பு

மணிலா, ஜன. 13
நேற்று பிலிப்பீன்ஸ் வருகை தரவிருந்த பரிசுத்த பாப்பரசருக்கு முஸ்லிம் தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அவர் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பணிமனைக்கு அருகில் சந்தேகத்துக்கு இடமான வகையில் நடமாடிய நபர் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

பாப்பரசரின் உடல் தளர்வு, பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவர் பயணம் செய்வதற்காக ஒரு லட்சத்து 22ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனம் ஒன்று தருவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வெரித்தாஸ் வானொலியின் 50 ஆவது ஆண்டு நிகழ்ச்சியிலும் மற்றும் பல நிகழ்ச்சிகளிலும் பாப்பரசர் பங்கு பற்றுவார். (ஒ-3)

# போர் இடைநிறுத்தம் மேலும் நீடிக்கப்படும்

### கேணல் ரத்வத்த நம்பிக்கை

கொழும்பு, ஜன. 13
விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள போர் இடைநிறுத்தம் நீடிக்கப்படும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த நம்பிக்கை வெளியிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலை புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் உருவாகி உள்ள போர் இடைநிறுத்த உடன்பாடு எந்தவித இடையூறும் இன்றி இருதரப்பினராலும் கடைப்பிடிக்கப்படுவதாகவும்—

எதிர்வரும் 22ஆம் திகதி அந்த உடன்பாடு முடிவடைகின்ற போதிலும், அது நீடிக்கப்படும் வாய்ப்பு உண்டு என்றும் அவர் கூறினார். [ஒ-3]

## மண்எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன. 13
ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க பாவனையாளர்களின் பங்கீட்டு அட்டைக்கு 21 ஆவது சுற்று மண்எண்ணெய் 2 லீற்றர் வீதம் ஜும்மா மொஸ்கியூ லேனில் அமைந்துள்ள சங்க கட்டடத்தில் வைத்து விநியோகம் செய்யப்படும். (ஒ)

## தேசிய அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜன. 13
'மாஹேற'கப்பலில் எடுத்து வரப்பட்ட ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களப் பகுதியினரால் தரம்பிரிக்கப்பட்டு அவ்வப் பகுதி பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## சிமெந்து ஊழியருக்கு இன்று போனஸ்

யாழ்ப்பாணம், ஜன. 13
சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் 1994 ஆம் ஆண்டுக்கான "போனஸ்" கொடுப்பனவு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வழங்கப்படவுள்ளதாக கூட்டுத்தாபன கணக்காளர் திரு. க. மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ)

## புலிகளின் குரல் வானொலியில்

13 — 01 — 1995
வெள்ளி இரவு

- ★ 8-01—எங்களின் தேசம்
- ★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-20 — நலந்தானா— "பெண்களின் மார்புப் புற்று நோய்க்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆலோசனை
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர்நாடகம் — பொன். கணேசமூர்த்தி எழுதும் 'இலங்கைமண்' இறுதி அங்கம்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

14 — 01 — 1995
சனி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 —களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 —களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### தமிழீழ வானொலி

வெள்ளி மாலை ஒலிபரப்பு

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 —கணநேரக் காவியங்கள்
- ★ 5-30 —மண்ணின் குரல் — தயாரிப்பு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
- ★ 5-45 — தமிழீழ கானங்கள்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சிலவினாடிகள்
- ★ 6-02 — நாடகம் "இளைப்பு" ஆக்கம் க. சிவா
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்.
- ★ 6-20 — என் தெரிவு

## செயலகம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன 13
இதுவரை காலமும் கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வில் இயங்கி வந்த தமிழீழ நிர்வாக சேவை நடுவப்பணியகம்—

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் யாழ் அரச செயலகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள இருமாடிக் கட்டடத்தில் இயங்க உள்ளது.

அன்றைய நாளில் இருந்தே முழுமையான நிர்வாகக் கடமைகள், பொது மக்கள் சந்திப்புக்கள் அரச ஊழியர் சந்திப்புக்கள் யாவும் நடைபெறும் என்று தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## சந்திரிகாவுக்கு ஆலோசகர்கள் மூவர்

கொழும்பு,ஜன.13
ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா மூன்று எம்பிக்களை தமது ஆலோசகராக நியமித்துள்ளார்.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியைச் சேர்ந்த அலித்த பெரேரா ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ரவிகருணநாயக்க, மற்றும் நீல் ரூபசிங்க ஆகியோர் இம் மூவரும் ஆவார்.

ஜனாதிபதியின் கீழ் இயங்கும் கொள்கை திட்டமிடல் அமைச்சில் இவர்கள் பணியாற்றுவார்கள். (இ-3)

# லயனலின் ராஜினாமாவில் காரணம் கூறப்படவில்லை

### அமைச்சர் தர்மசிறி தகவல்

கொழும்பு, ஜன. 13
தாம் வகித்து வந்த சகல பதவிகளையும் திரு. லயனல் பெர்னாண்டோ ராஜினாமாச் செய்துள்ள போதும் அவர் அதற்கான காரணம் எதனையும் கூறவில்லை என்று தகவல்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கே அவர் இப்படிக் கூறினார்.

தகவல் துறை அமைச்சு செயலாளராகவும், லேக்ஹவுஸ் நிறுவன தலைவராகவும் இருந்து வந்த லயனல் பெர்னாண்டோ கடந்த வாரம் தமது சகல பதவிகளையும் ராஜினாமாச் செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

அவரது ராஜினாமா ஏற்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் வெளிவித்தார். (ஒ-3)

### அரசுக்கோ, படையினருக்கோ

## போர் நிறுத்த உடன்பாடு நன்மை ஏதும் பயக்காதாம்

கொழும்பு, ஜன. 13
விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள போர் இடைநிறுத்த ஒப்பந்தம் அரசுக்கோ, படையினருக்கோ நன்மை ஏதும் பயக்க மாட்டாது என்று சில சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக 'திவயின' சிங்கள நாளேடு நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இதனால் நன்மையடையக் கூடும் என்றும் அந்த அதிகாரிகள் குறிப்பிட்டதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-3)

## சபரிமலையில் இம்முறை 23 ஐயப்ப பக்தர் மரணம்

சென்னை, ஜன. 13
தென்னிந்தியா கேரளாவில் உள்ள முக்கிய ஆலயங்களில் ஒன்றான சபரிமலைக்குச் சென்ற லட்சக்கணக்கான ஐயப்ப பக்தர்களில் இதுவரை 23 பேர் மாரடைப்பினால் மரணமாகியுள்ளனர்.

இலங்கையில் இருந்தும் இக் கோயிலுக்கு ஆயிரக் கணக்கான பக்தர்கள் செல்வது குறிப்பிடத்தக்கது.

சிறுவர் முதல் முதியோர் வரை கறுப்பு ஆடை அணிந்தே சபரிமலைக்குச் செல்வர். பெண்கள் அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

40 நாள்கள் விரதம் இருந்து சபரிமலை ஏறிய 23 பக்தர்கள் இதுவரை மாரடைப்பினால் இறந்துவிட்டனர் என்று சபரிமலைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ)

## கப்பல் மூலம் தபால் அனுப்ப அனுமதி பெற வேண்டும்

### புதிய நடைமுறை அமுலில்

யாழ்ப்பாணம், ஜன. 13
யாழ். மாவட்டத்தில் இருந்து கப்பல்மூலம் கொழும்புக்கு தபால்களை எடுத்துச் செல்ல புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடம் அனுமதி பெற வேண்டும் என்று புதிய நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது.

பருத்தித்துறைக்கு வரும் கப்பல்களில் பொருள்கள் இறக்கி முடித்ததும், யாழ். மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கான தபால்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அனுமதியுடன் கொழும்புக்கு இது வரை அனுப்பப்பட்டு வந்தன.

நேற்று முன் தினம் தபால் திணைக்களத்துக்கு புதிய நடைமுறைகள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு, கப்பல் கம்பனி ஆகியோரின் அனுமதி பெற்றால் மட்டுமே தபால் பொதிகளை கப்பலில் எடுத்துச் செல்ல முடியும் என செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தமக்கு அறிவித்துள்ளதாக தபால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3)

## நல்ல வண்ணம் வாழ

மண்ணில் நல்ல வண்ணம் வாழும் வழியை கூறும் நூல்களில் சிறந்தவை என்று சிலவற்றைத் தொகுத்து ஒரு பழம் பாடல் கூறுகின்றது. அந்தப்பாடல்:

தேவர் குறளும்
திரு நான் மறை முடிவும்
மூவர் தமிழும்
முனி மொழியும்-கோவை
திருவாசகமும்
திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென் றுணர்"

என்னும் பாடலாகும்.

இந் நூல்கள் அனைத்தும் இம்மையில் மண்ணில் நல்ல வண்ணம் வாழுவதற்கும் மறுமையில் நல்ல கதி எய்துவதற்கும் வழிகாட்டுவனவாகும். இவை காட்டும் வழி ஒரே சொல்லில் சொன்னால் நீதி என்று சொல்லலாம். மேன்மை கொள் சைவநீதி என்று கூறுகிறது கந்தபுராணம்.

### ஞானக்கதிர்

சிவபெருமானை நீதியே என்று விளிக்கிறார் மாணிக்க வாசக சுவாமிகள். நீதிவடிவினனாகிய இறைவனை நீதி நெறி தெரிந்தவர்களால் தான் அடைய முடியும்எனவே நீதி நெறியில் வாழ்தலும் நீதிவடிவாகிய இறைவனை இடையறாது நினைத்தலும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தலாகும்.

அத்தகைய வாழ்வு இடைத்தால் மனிதப்பிறவி பயனுடைய பிறவியாக அமையும். மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்றார் திருநாவுக்கரச சுவாமிகள்.

இப் பூவுலகில் நாள்தோறும் நன்மையாக வாழலாம். நினைத்தால் மறுமையில் நல்ல கதி அடைவதற்கும் யாதொரு குறையும் இல்லை. எதை நினைக்க வேண்டும் என்றால் கண்ணிலே நல்லதே படத்தக்க திருக்கழுமலம் என்னும் வளமுள்ள நகரத்திலே பெண்ணில் நல்லாளாகிய உமாதேவியாரோடு பெருந்தன்மை மிக்க சிவபெருமான் வீற்றிருப்பதை நினைத்தால் என்று கூறுகின்றார் திருஞானசம்பந்தர். இக் கருத்தைக் கொண்ட பாடல்—

மண்ணில் நல்ல வண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணில் நல் லகதிக்கு
யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல் ல.'.துறுங்
கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல் லாளொடும்
பெருந்தகை இருந்ததே

என்பதேயாகும்.

சமயவாழ்வு விரும்பும் ஒருவன் தனக்கும், இறைவனுக்கும் இறைவனால் படைக்கப் பெற்ற இந்த உலகுக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஏற்படுத்துவதுடன் இறைவனின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்.

இறைவனின் நோக்கத்தைத் தெளிந்து அதனை நிறைவேற்றுவதே பிறவிப்பயன் என்பதைத் தெரிந்து கொண்டால் மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்.

இறைவனின் நோக்கத்தைத் தெளிந்து கொண்ட நாயன்மார்கள் அனைவரும் இறை நெறி நின்றனர்; இம்மைப் பயனும், மறுமைப் பயனும் எய்தினர்; மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தனர். ★

செல்வி பா. பாரதி

# ஈழ அறிஞர்களை திருப்பி அனுப்பிய விவகாரத்தின் பின்னணியில் மர்மம்

தஞ்சாவூரில் நடைபெற்ற 8வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த தமிழறிஞர்களில் சிலர் என்ன காரணத்திற்காக நாடு திருப்பியனுப்பப்பட்டிருந்தனர் என்பது இன்னமும் புரியாத புதிராகவே இருக்கிறது.

சம்பந்தப்பட்ட தமிழறிஞர்களுக்கான 'விஸா'க்கள் இந்திய மத்திய அரசாங்கத்தினால் ரத்துச் செய்யப்பட்டதை அடுத்தே இந்த அறிஞர்கள் நாடு திருப்பியனுப்பப்பட்டனர் என்ற தமிழ்நாடு மாநில அரசாங்கத்தின் அறிவிப்பு தொடர்பாக மத்திய அரசாங்கம் அதன்நிலைப்பாட்டை தெளிவாக விளக்கும் வரை இந்த மர்மம் துலக்கப்படாததாகவே இருக்கும்.

இவ்வாறு சென்னையில் வெளியாகும் "த இந்து" பத்திரிகையை மேற்கோள் காட்டி கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விஸாவை ரத்துச் செய்வதென்பது இராஜதந்திரிகள் மற்றும் மிகமுக்கிய பிரமுகர்கள் சம்பந்தப்பட்ட பிரத்தியேகமான விவகாரங்களில் மாத்திரமே மத்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகிறது என்று இந்திய புலனாய்வு வட்டாரங்கள் கூறுகின்றன. இது கூட, சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னரே, மத்திய அரசினால் செய்யப்படுகிறது.

பந்தோபஸ்தும், சட்டம், ஒழுங்கு பிரச்சினையும் முற்று முழுதாகவே மாநில அரசாங்கத்தின் முன்னுரிமைக்குரிய விவகாரங்களாகும், எந்தவொரு வெளிநாட்டவரையும் 'விரும்பத் தகாதவர்' எனப் பிரகடனம் செய்வதற்கும் அவரை நாடு திருப்பியனுப்புவதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்குமான போதிய அதிகாரங்கள் மாநில அரசாங்கங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

வெளிநாட்டவர் ஒருவரின் பிரசன்னமானது விரும்பத்தகாதது என மாஜிஸ்திரேட் ஒருவரின் முன்னிலையில் சத்தியக் கடதாசியொன்றை தாக்கல் செய்த பின்னர் அந்த வெளிநாட்டவரை நாடு திருப்பியனுப்புவதற்கான அதிகாரம் மாநில செயலாளருக்கோ அல்லது பொலீஸ் சுப்பிரின்டன் மற்றும் அந்தத் தரத்திற்கும் மேலான பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இத்தகைய நடைமுறை கடந்த காலத்தில் மாநில அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்டிருக்கிறது என்று முன்னாள் குடிவரவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் அங்கீகாரமோ அல்லது அழைப்போ இல்லாத எவருமே தமிழாராய்ச்சி மகாநாட்டில் பங்கேற்பதற்கு உரிமையற்றவர்கள் என்ற நிலைப்பாட்டை தமிழ்நாடு மாநில அரசாங்கம் எடுத்த நிலையில், தமிழறிஞர்கள் நாடு திருப்பியனுப்பப்படும் விவகாரம் குறித்து இறுதி நிமிடம் வரை அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்துக்கு அறிவிக்க அரசாங்கம் தவறியது ஏன்?

முன்னைய தமிழாராய்ச்சி மாநாடுகளில் பங்குபற்றிய தமிழறிஞர்கள் அழைக்கப்படாத நிலையில், மாநில அரசாங்கம் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்துவதை நிறுத்துமாறு உத்தரவிடுமாறு கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில் மாநாட்டை நடத்தும் பொறுப்பு முற்றுமுழுதாகவே அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்திற்கே உரியதென மாநில அரசாங்கம் குறிப்பிட்டிருந்தமை விநோதமானது என்று அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் தலைவரான ஜப்பானியர் நொபோரோ காரஷிமா ஏற்கனவே கருத்து வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, ஜனதா கட்சி தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் உலக தமிழாராய்ச்சி மாநாட்டின் உண்மையான நோக்கம் விடுதலைப் புலிகளை ஊடுருவச் செய்வதே எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநாட்டில் புலிகளின் பரந்தளவிலான தொடர்பை மறைப்பதற்காகவே சில தமிழறிஞர்கள் நாடு திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும் சுப்பிரமணிய சுவாமி குறிப்பிட்டிருக்கிறார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பொங்கல் வாழ்த்துமடல், பொருளியல் நோக்கு நூல் நிலையங்களுக்கு ஏற்ற நாவல்கள், கொப்பி வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஸ்ரீகாந்த் புத்தகசாலை யாழ் - நல்லூர். மக்மிலன் புத்தகசாலை யாழ். மற்றும் கலண்டர், டயறிகள் மலிவு விலையில்.

[சி-277]

### மலிவு விற்பனை

எங்களிடம் சண்(Sun)மார்க் நூல் வகைகள் இறக்குமதி செய்யப்பட்ட Bratape எலாஸ்டிக் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. சிறிமுருகன், இல. 303, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.

(34635)

### கலண்டர்கள்

சகல விடுமுறை நாட்களும் [தமிழீழம் உட்பட] அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் சிலிப் வகைகள் தனியாகவும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையன் பதிப்பகம். பதிப்பக சாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம்.

(34367)

### புலமைப் பரிசில் - 95

யாழ் Bond நிறுவனத்தால் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தில் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

[8187]

### கோழிக்குஞ்சு விநியோகம்

11ஆம் திகதி வெள்ளிக்கிழமை கறுப்பு இறைச்சிக் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும. ஓடர்கொடுத்தவர்கள் உடன் பெற்றுக்கொள்ளவும். மல்வம் வீதி ஊடாக சிங்கம் வீதி, உடுவில்.

[7859]

### G. A. Q. — B. A.

தமிழ் இலக்கணம் வினா-விடை, பத்மாவதி சரிதம்- அ. மாதவ ஐயர், சிலப்பதிகாரம் - கானல்வரி தடலாடு காதை.பாடலும்விளக்கவுரையும் புறநானூறு 1 முதல் 20 வரை. அகநானூறு, கண்ணப்பநாயனார் புராணம் வெளியீடு; உயர் கல்வி நிறுவனம். விற்பனையாகிறது: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம்.

[சி-87]

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரால் ஆங்கிலம் (Spoken English and Literature) ஆரம்ப அறிவில் இருந்து தனிப்பட்ட முறையிலும், வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும். சி. ஜெயராஜா, 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(8189)




(சி-261)

### டயறிகள்

சிறிய பெரிய அளவுகளில் பூபாலசிங்கம் டயறிகள் வெளிவந்து விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. பூபாலசிங்கம் புத்தக நிலையம் யாழ்ப்பாணம். [சி-285]

### தளபாடங்கள்

பலசரக்குக்கடை பாவனைக்கு உகந்த றாக்கைகள் 10 அடி நீளம் 7 அடி உயரம் (ஒன்று), 12 அடி நீளம் 7அடி உயரம் [இரண்டு] விற்பனைக்குண்டு. தொடர்பு: அருள்ஸ் தொழிலகம், 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

[சி-283]

### ENGLISH LITERATURE

English Literature for year 9, 10 and 11 Classes Commence on the 14th of January Contact Miss. U. Muthuthamby, Vinayagar Veethy, Nallur North (Near Chandrasegara Pillaiyar Kovil Kalviankadu). [34630]

### ஆங்கிலம்

Brightஇன் மாணவர்களுக்கான M. K. தில்லைமோகன் எழுதிய English Grammar (Omos Selection) விலை 75/-. பூபாலசிங்கம் புத்தகசாலை மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

[34564]

## SPOKEN ENGLISH

By

**Mr. BRITTO**

புதிய பிரிவு

SAT. SUN.

நேர அட்டவணை

5-45 p. m.

(அனுமதிகள் வழங்கப்படுகின்றன)

**SCIENCE COLLEGE**

பெருமாள் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-148)

## சில்வர் சீல்ட் தயாரிப்புக்களான

☆ நைலோன் கொட்டன் சொக்ஸ்
☆ எலாஸ்டிக்
☆ பட்டன்கள்
☆ சிப்
☆ லேஸ்
யாவற்றிற்கும்




சிறி முருகன்

303. கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம்

[34633]

உ
ஓம் சக்தி

## ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

வசந்தபுரம் – களபாவோடை

## வருடாந்த அலங்கார உற்சவம்

ஆரம்பம்: **14 – 1 – 1995**

| | | | |
|---|---|---|---|
| தினமும் காலை | — | 8.00 — | அபிஷேகம் |
| ,, | — | 9-30 — | பூஜை |
| ,, | — | 10-30 — | சொற்பொழிவு |
| மு. பகல் | — | 11-00 — | சுவாமி உலாவருதல் |
| நண்பகல | — | 12.00 — | அன்னதானம் |
| 22-1-95 காலை | — | 10.00 — | தேர் |
| 23-1-95 ,, | — | 10 00 — | தீர்த்தம் |
| 24-1-95 பி. பகல் | — | 3-00 — | பூங்காவனம் |

[34674) —தேவஸ்தானம்.

## மனையியல் வகுப்புக்கள்

✶ தையல் ✶ பூவேலை
✶ கேக்ஐசிங் ✶ சமையற்கலை
✶ கைப்பணி ✶ கூந்தல் அலங்காரம்

அனுமதிகள் 20 – 01 – 95 வரை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

ஆரம்பம்: **25 - 01 - 1995**

காலை 9-00மணி

**சைன்** மனையியற் கல்வியகம்

370 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[34649]

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்

மார்கழி மாத

## ★ தீர்த்தத் திருவிழா ★

ஆவணியில் இருளோடும் மார்கழியில் அருள் ஓங்கும்
ஆண்டுக்கு இரண்டு தரம் தேரோடும்
நல்ல திருவடி நிலையோரம் தீர்த்தங்கள் ஆடிவரும்
அடியவர் பிணியோடும் அருள் சேரும்
தடி கொண்டு பால்முட்டி தயிர்முட்டி அடித்திடும்
பணிகாண அடியவர் கூடிவரும்
இது தேரோடு தீர்த்தமும் தெய்வீகம் பொங்க வரும்
கண்ணாளன் கண்ணனின் பொன்னாலைக் கோயில்.

ஆக்கியோன்: மூளாயூர் ஆசுகவி, சிவசுப்பிரமணியம்

(34506)

3ஆவது

## பிறந்தநாள் வாழ்த்து

13 — 01 — 1995

### ★ செல்வி பூ. சோபனா (சுகி) ★

மட்டக்களப்பு கல்லாறைச் சேர்ந்த திரு. திருமதி பூர்ணானந்தசர்மா - ரஞ்சனா தம்பதிகளின் அரும் பெரும் செல்வி சோபனா தனது மூன்றாவது பிறந்த நாளை, இன்று (13 - 01 - 1995) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் அப்பா, அம்மாவுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, மாமாமார் (சிறி, ஜெயா, குகன்), சித்திமார் (சுகர்னா, நிரோ, சுலோ) மற்றும் நண்பர்களும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமான் அருளால் சகல கலாவல்லியாகவும் நீண்ட ஆயுளுடனும் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:-
பிரம்மஸ்ரீ. ந. சபாரத்தினக்குருக்கள் (தாத்தா)
ஆசிமட அரசடிப் பிள்ளையார் கோயில்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (34653)

## நன்றி நவிலல்

26 – 12 – 94 அன்று இறைபதமெய்திய

திருமதி

**சுகிர்தராணி பதுவைநாயகம்**

(ஆசிரியை)

அவர்களின் இறுதி அஞ்சலிகளிலும், இரங்கற்திருப்பலியிலும், நல்லடக்கத்திலும் கலந்து எமக்கு ஆறுதல் அளித்த குருக்கள், கன்னியர்கள், கல்விப்புலத்தினர், நவாலி மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும் ஏனைய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கும், யாழ். போதனா வைத்தியசாலையைச் சார்ந்த அனைவருக்கும் சுன்னாகம் றோ. க. த. க பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பழைய மாணவர் சங்கத்தினர், ஆசிரிய குழாத்தினர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்தியை அனுப்பியவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. அ. பதுவைநாயகம் (கணவன்)
[34675] ப. அன்ரன் இருபைநாயகம் (மகன்)

## அந்தியேட்டி நினைவு தினம்

பிறப்பு: 20 — 05 — 1911



இறப்பு: 14 — 12 — 1994

### அமரர் கறுவல்தம்பி எதிர்நாயகம்

எங்கள் குடும்பத் தலைவரும், முன்னாள் இ. போ. ச. பரிசோதகரும் ஆகிய அமரர் கறுவல்தம்பி எதிர்நாயகம் அவர்களின் அந்தியேட்டி தினம் இன்று (13-1-1995) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

மக்கள், மருமகன்
பேரன்.

பண்ணாகம்,
சுழிபுரம். (34631)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

''என்றும் வணங்குவ துன் மலர்த்தாள்''

மண்ணில்: 25 — 01 — 1909



விண்ணில்: 28 — 01 — 1990

நயினை
திருமதி
**கண்மணி கணபதிப்பிள்ளை**

திதி: 13 — 01 — 1995

''தந்தையும் நீயுமெம் சிந்தையுள் நாளும் பொருந்துகவே''!

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

171, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (34665)

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
யாழ்ப்பாணம்.

க. பொ. த. (உ. த.)

## அனுமதி - 1997

தமிழீழ பொதுக் கல்வித்தேர்வு முடிவின் அடிப்படையில் மேற்படி வகுப்புக்கு (வர்த்தகம் / விஞ்ஞானம் / கணிதம்) அனுமதி பெற விரும்புவோர் 20-01-1995இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

— அதிபர்.

(சி-157)

வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி

## கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

ஆரம்பம்: **14 - 01 - 1995**

**Introduction to Computer and BASIC Language**

★ O/L, A/L மாணவர்களுக்கென விசேடமாக ஆரம்பிக்கப்படுகின்ற பயிற்சி நெறி.
★ கூடிய செய்முறைப் பயிற்சியும், தவணை முறைக் கட்டண வசதியும்.
★ திறமையான மாணவர்களுக்கு விசேட மேலதிக பயிற்சிக் காலம்.
★ வார நாள், வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

தொடர்பு கொள்க:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETER'S LANE JAFFNA.

[சி-285]

## கலை, வர்த்தகக் கல்லூரி

# C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகில், யாழ்ப்பாணம்.

A/L 95 ஆம் ஆண்டுப் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு துரித மீட்டல் வகுப்பு

ஆரம்பம்:- 14 - 01 - 1995

| | | |
|---|---|---|
| கணக்கியல் | — | 1 – 3 |
| வர்த்தகம் | — | 3 – 4 |
| அளவையியல் | — | 4 – 5 |
| பொருளியல் | — | 5 – 6 |
| தமிழ் | — | 2 – 3 |
| இந்து நாகரிகம் | — | 8 – 9 |

குறிப்பு:-

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான இவ்வகுப்பு அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

– நிர்வாகி.

(சி/279)

ஓராண்டு

## நிறைவும் நினைவும்

மலர்வு: 18 — 12 — 1929



உதிர்வு: 13 — 01 — 1994

### அமரர் சண்முகரெத்தினம்

(ஓய்வு பெற்ற உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்)

என்னை நீ படைத்திலையேல் இடும்பைக்கு இடமெங்கே? என்று பாடினார் அப்பர் சுவாமிகள். எங்களையும் இப்படித்தான் பாட வைத்தான் இறைவன். எமக்கென்று சொந்தம் பாராட்ட இரண்டு ஆண் பிள்ளைகளைத் தந்து விட்டு நடுவயதில் பறித்து விட்டான் இறைவன். இந்த துயரத்தில் காலமெல்லாம் ஏங்கி ஏங்கி வாழ்ந்தீர்களே ஐயா!

இப்பொழுது நீங்களும் போய் விட்டீர்கள் நான் தனித்து விட்டேன். கண்ணீர்க் கடலில் குளிக்கிறேன். தங்கள் புனித ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

—அன்பு மனைவி.

''சக்தி இல்லம்''
விதானை ஒழுங்கை,
கொக்குவில். [34438]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## ஐ. தே. கட்சி புதுமைசெய்யுமா?

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அரசமைப்பு முறையில் தீர்வு காண வேண்டும் என்ற யோசனைக்கு ஐக்கிய தேசியக் கட்சி தரப்பில் ஆதரவு அதிகரித்து வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

கட்சியின் இப்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, கட்சியின் அவைத் தலைவர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் உட்பட பெரும்பாலானோர் முழுமையான சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு, தமது கட்சி ஆதரவளிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு உடையவர்களாக விளங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது ஓர் நல்ல அறிகுறியாகும்.

தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், பதவியில் உள்ள அரசாங்கம் தமிழர்களுக்குச் சில உரிமைகளை வழங்க முற்பட்ட போதெல்லாம், எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்ததே வரலாறாக உள்ளது. அதனாலேயே, இனப்பிரச்சினை விவகாரம் இந்தளவுக்கு விஸ்வரூபம் எடுத்துள்ளது. இதில் தெற்கின் இரண்டு பிரதான கட்சிகளுக்கும் சம பங்குண்டு!

அதனால், இனியும் அவ்வாறு நடந்து கொண்டால், நாட்டுக்கு மேலும் பேரழிவும், அது பிளவுண்டு போகும் ஆபத்தும் உண்டு என்பதனை தெற்கின் அரசியல் வாதிகள் உணரத் தலைப்பட்டுள்ளனர் என்பதற்கான சமிக்ஞையே இது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்படவேண்டும்; இராணுவத்தீர்வு நிராகரிக்கப்படவேண்டும்; போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்; என்பதில் சிங்கள மக்கள் மிகவும் ஆர்வமாகவும், அக்கறையாகவும் உள்ளார்கள். கடந்த வருடப் பிற்பகுதியில் நடைபெற்ற இரண்டு பெரிய தேர்தல்களின் ஊடாகவும் அவர்கள் தமது இந்த நிலைப்பாட்டை உறுதி செய்துவிட்டனர்.

ஆனால், இனப்பிரச்சினைக்கான தீர்வு எதுவாக அமைய வேண்டும் என்பதனை சிங்கள மக்கள் முடிவு செய்வதற்குச் சந்தர்ப்பம் தரப்படவில்லை. அதன் காரணமாக, தீர்வு குறித்து சிங்களத் தலைவர்களே முடிவு செய்ய உள்ளார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சிங்களத் தலைவர்கள் வழங்கும் "சில்லறை"த் தீர்வுகளை அவர்கள் ஏற்கப் போவதில்லை. அதே வேளை முன்னரைப் போல ஏமாற்றவும் முடியாது. முந்திய காலங்களைப் போலன்றி, ஏமாறுவதற்குத் தயாரில்லாத, ஏமாற்ற முடியாத தலைமை தமிழர்களுக்கு உண்டு.

எனவே, சிங்களத் தலைவர்கள் தமிழர்களுக்கு வழங்கும் உரிமைகள் குறித்து, முன்னரைப் போல, தமக்குள் எதிரும் புதிருமாக நின்று மோதுவதால் பாதிப்பு அவர்களுக்கே. இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் அவரின் நெருங்கிய சகபாடிகளும் உணர்ந்துள்ளார்கள் என்று கொள்ளலாமா?

சமஷ்டி அரசமைப்பின் கீழான வடக்கு - கிழக்கு இணைந்த தன்னாட்சி அதிகார உரிமையை உறுதி செய்யும் தீர்வு ஒன்றே தமிழர்களைத் திருப்திப்படுத்தக் கூடிய ஆகக் குறைந்த ஒன்றாகும்.

இதனை தெற்கின் அரசாங்க, எதிர்க்கட்சித் தரப்புகள் நன்றாகப் புரிந்து கொண்டால் இனப்பிரச்சினையை இலகுவில் தீர்த்துவிடலாம்.

தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வின் அடிப்படையாக சமஷ்டி அரசமைப்பு அமைய வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களின் விருப்பமானால், அதனைப் பெருந்தன்மையுடன் பகிரங்கமாக வெளிப்படுத்துவது நல்லது. அவ்வாறு செய்யின் அது தெற்கு அரசியலில் ஒரு புதுமையாகவும், நாட்டின் தேசிய விவகாரமான இனப்பிரச்சினை தொடர்பான புதிய திருப்பமாகவும் அமையும். இனப்பிரச்சினைக்குத் தன்னாலேயே தீர்வு காணமுடியும் என்ற அரசின் தம்பட்டத்தையும் "அடித்து" விடலாம்!

---

உண்ணாவிரதப் போராட்டத்தின் பின்

# மட்டு. முகாமில் இருந்து 25 தமிழ் இளைஞர் விடுதலை

கொழும்பு, ஜன. 13

மட்டக்களப்பு தடுப்பு முகாமில் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்ட 94 தமிழ் இளைஞர்களில் 25 பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகள் எதுவுமின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தம்மை விடுதலை செய்யுமாறு இவர்கள் கடந்த வாரம் முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மனித உரிமைகள் குழுத் தலைவர் திரு. குஸாவினால் பரிந்துரைக்கப் பட்டவர்களில் 25 இளைஞர்களை விடுதலை செய்வதாகவும் —

ஏனையோரின் விசாரணைகள் முடிந்ததும் வழக்கு தாக்கல் செய்ய முடியாதவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் —

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார். (ஒ-3)

## மின்சாரம் கிடைத்தால் உடன் விநியோகிக்க மாநகரசபை தயார்

குடாநாட்டுக்கு மின்சாரம் கிடைக்கும் பட்சத்தில் யாழ். மாநகராட்சி மன்ற பகுதியில் உள்ள மக்களுக்கு உடனடியாக மின்சார விநியோகத்தை ஆரம்பிக்க மாநகர மின்சாரப் பகுதியினர் தயாராக உள்ளனர்.

யாழ். மாநகரப் பகுதியில் 250 கிலோ மீற்றர் நீளமான மின் விநியோக லைன்களில் 110 கிலோ மீற்றர் நீளமான விநியோக லைன்கள் சீர் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 10 ஆயிரம் பாவனையாளரின் மின் இணைப்புகளும் சீராக்கப்பட்டு பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு யாழ். மாநகர மின்சார பொறியியலாளர் திரு. வே. நவரத்தினராசா தெரிவித்தார்.

இந்த வேலைகளைவிட மாநகரப் பகுதியில் இதுவரை 12 உப மின் நிலையங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. மிகுதி 5 உபமின்நிலையங்கள் திருத்தப்பட்டு வருகின்றன.

யாழ். மாநகரப் பகுதியில் யாழ். நகர்ப் பகுதி மற்றும் கரையோர பகுதியிலேயே மின்சார இணைப்புக்கள் கடந்த கால இராணுவ நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டன.

கொழும்பில் இருந்து மின்சார உபகரணங்கள் வந்து சேராதபோதும் மாநகராட்சி மன்றத்தில் கையிருப்பில் இருந்த மின்சார உபகரணங்களை கொண்டு மிக குறுகிய காலத்தில் மின் இணைப்புக்கள் (வீதி லைன்கள்) சீர் செய்யப்பட்டு, முடிவுறும் தறுவாயில் இருப்பதாகவும் திரு. நவரத்தினராசா மேலும் தெரிவித்தார். [ஒ-17]

முன்னைய அரசில் அங்கம் வகித்த

## அமைச்சர்கள், எம். பிக்கள் மீதே முதலில் விசாரணை

### நிரந்தர லஞ்ச ஆணைக்குழு நடத்தும்

கொழும்பு, ஜன. 13

கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த சில அமைச்சர்கள் மற்றும் ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து முதலில் நிரந்தர லஞ்ச ஆணைக்குழு விசாரிக்க இருக்கிறது

நீதி, அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர லஞ்ச ஆணைக்குழு முதலில் இந்த முறைப்பாடுகளை விசாரித்த பின்னர் ஏனைய முறைப்பாடுகள் குறித்து விசாரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-3)

## தீவக மக்களின் இன்னல்: அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜன. 13

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த தீவக மக்கள் எதிர்நோக்கும் வதிவிடம், கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்ற பிரச்சினைகள் குறித்து யாழ். அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மகஜர் ஒன்றை இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் அரச அதிபருக்கு சமர்ப்பித்துள்ளது.

தற்சமயம் தீவக மக்கள் அகதிமுகாம்களிலும் இடிந்த கட்டடங்கள், கோயில்கள், உறவினர் வீடுகள் என்பனவற்றில் எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-17)

## ரஷ்யாவுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி டுடயேவ் தயார்

### செய்தியாளரிடம் அவரே தெரிவிப்பு

ரஷ்யாவுடன் பேச்சு நடத்த தாம் தயாராக இருப்பதாக செசின்யாவின் ஜனாதிபதி டுடயேவ் அறிவித்துள்ளார்.

குறொஸ்னியின் தெற்கு மாவட்டத்தில் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் அவர் இப்படி அறிவித்துள்ளார்.

தலைநகர் குறொஸ்னியில் சண்டை ஆரம்பித்த பின்னர் ஜனாதிபதி மாளிகையில் இருந்து தப்பிச் சென்ற டுடயேவ் இப்போதுதான் முதன் முறையாகச் செய்தியாளர்களைச் சந்தித்துள்ளார்.

யுத்த நிறுத்தம் பிரகடனம் செய்யப்பட்டுள்ள போதும் ரஷ்யத் துருப்புகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## தைப்பொங்கல் தினம் நாளை சனிக்கிழமையாம்

### சோதிட ஆய்வு மன்றம் அறிக்கை

சூரிய பகவான் குறித்த தினத்தன்று, சூரிய அஸ்தமனத்தின் முன், மகர ராசியில் பிரவேசிக்கும் தினமே மகரச் சங்கராந்தி என்றும் தைப் பிறப்பென்றும் போற்றப்படும் தைப்பொங்கல் திருநாளாகும்.

இவ்வாறு இலங்கைச் சோதிட ஆய்வு மன்றத்தின் செயலாளர் சி. இரத்தினவேல் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நம்நாட்டில் பாவனையிலுள்ள பஞ்சாங்கங்கள் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருப்பது மக்கள் மத்தியில் சில தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

1821 ஆம் ஆண்டு தொடக்கம் இங்கிலாந்திலிருந்துவெளிவரும் ஆங்கில வானசாஸ்திரி ர. ப்பியேல் என்பவரால் சோதிடத் தேவைகளுக்காக அதிநுட்பமாகச்செப்பஞ் செய்யப்பட்ட ர. ப்பியேல் எபெமெரிஸ் (Raphael's Astronomical Ephemeris) என்ற கிரகஸ்புட சஞ்சிகையும் ஜேர்மனியிலிருந்து 1850 ஆம் ஆண்டு தொடக்கம் துல்லியமாகக் கணிப்பிடப்பட்டுவெளிவரும் (Die Deutsche Ephemeride) கிரகஸ்புட சஞ்சிகையும் 14-01-1995 சனிக்கிழமையே மகர சங்கராந்தி என்றும் தைப்பிறப்பென்றும் வலியுறுத்துகின்றன.

மேலும் இக்கணிப்பை இந்தியாவில் வெளிவரும் இந்திய அரசினர் பஞ்சாங்கம், லாகிரி பஞ்சாங்கம், கும்பகோண மடத்துப் பஞ்சாங்கம், பாரத் கணித பஞ்சாங்கம், வாசன் சுத்த திருக்கணித பஞ்சாங்கம், அமெரிக்கன் நோட்டிக்கல் அல்மனச் உட்பட ஏப்பா, இரணம ஆகிய சிங்கள பஞ்சாங்கங்களும் ஊர்ஜிதம் செய்கின்றன — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம் தைப்பொங்கல் ஞாயிற்றுக்கிழமையாகும். இலங்கையில் வெளியிடப்படும் நாட்காட்டிகளிலும் ஞாயிற்றுக்கிழமையே தைப்பொங்கல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்க விடுமுறை நாள் பட்டியலிலும் 15 ஆம் திகதியே தைப்பொங்கல் தினம் [illegible] பட்டுள்ளது. (ஒ)

## உரும்பிராயில் திருட்டு அதிகம்

யாழ்ப்பாணம், ஜன. 13

உரும்பிராய் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் கடந்த சில நாள்களாக அதிகரித்து வருவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு உரும்பிராய் வடக்கில், ஆடு ஒன்றை திருடி சைக்கிளில் ஏற்றிச் சென்ற சமயம், மக்கள் கூக்குரல் இடவே ஆட்டையும் சைக்கிளையும் கைவிட்டு விட்டு திருட்டுக் கோஷ்டியினர் தப்பிச்சென்று விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது (ஒ-17)

## தொழிற் சங்கம் மீண்டும் செயற்பாடு

யாழ்ப்பாணம், ஜன 13

நீண்ட வருடங்களாக செயலிழந்து இருந்த யாழ். போதனா வைத்தியசாலை தொழிலாளர் சங்கமான 'ஸ்ரீலங்கா ஜனரச சுகாதார சேவைச் சங்கம்' மீண்டும்இவ்வாண்டு முதல் செயல்பட ஆரம்பித்துள்ளது.

புதிய அரசு பதவி ஏற்றதை அடுத்து இந்த தொழிற்சங்கம் செயற்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பொதுக் கூட்டம் கூடி சங்கத்தை செயல்படுத்தும் வகையில் புனரமைத்து செயற்குழு ஒன்றையும் தொழிலாளர்கள் தெரிவு செய்தனர். (ஒ-15)

## அ. தி. மு.கவின் எம். பிக்கு விளக்க மறியல்!

புதுடில்லி, ஜன. 13

அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஆர். சிறீதரன் கொம்பியூட்டர் உதிரிப்பாகங்களை சுங்கத்தீர்வையின்றி நாட்டுக்குள் கடத்தினார் என்று சந்தேகிக்கப்பட்டு கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

45 லட்சம் ரூபா பெறுமதியான 542 கொம்பியூட்டர் டிங்குகளை விமான மூலம கடத்தி வந்த சம்பவம் தொடர்பாக கைதாகியுள்ள இவர், டில்லி நீதிமன்றத்தால் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஒ-3)

## பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

வலி-வடக்கு பிரதேச இளைஞர் சேவை நிலைய ஆதரவில் மகளிர் நடமாடும் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு மல்லாகத்தில் உள்ள நிலைய பயிற்சிக் கூடத்தில் நடைபெற இருக்கிறது.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வோருக்கான கலந்துரையாடல் இன்றும், [illegible] (ஒ-3)

## திருட்டுப்போன காளை மாடுகள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

சண்டிலிப்பாயில் திருட்டுப் போன இரண்டு காளை மாடுகள் கொக்குவிலிலும், இருபாலையிலும் இருந்து மீட்கப்பட்டன.

திருடன் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டதை அடுத்து இரு மாடுகளும் உரியவர்களிடம் ஒப்படைக்கப் பட்டன.

கடந்த வாரம் சண்டிலிப்பாய் தோப்புப் பகுதியில் உள்ள ஒருவரின் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு மாடுகளே திருட்டுப் போனவையாகும். (ஒ-15)

## வல்லைவெளி மரம் வளர்ப்பு பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

வல்லைவெளி மரம் வளர்ப்புத் திட்டம் கட்டாக்காலி கால் நடைகளால் அண்மைக் காலமாக மோசமாக பாதிப்படைந்து வருகிறது.

இதனால் வல்லைவெளி மரம் வளர்ப்பு முயற்சியை மேற்கொண்டுள்ள மேற்படி திட்ட நிர்மாணிகள் பெரும் கவலை தெரிவித்தனர். (ஒ-15)

## எம். ஜி. ஆர். பிறந்த நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன. 13

எம். ஜி. ஆரின் 78 ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் பெருவிழாவாக எதிர்வரும் 17ஆம் திகதி கொண்டாடப்பட இருக்கிறது.

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையம், தாவடி எம். ஜி. ஆர். இல்லம் ஆகிய இடங்களில் நினைவுரை, கலையரங்கம், பட்டிமண்டபம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். (ஒ-3)

## பொருள்கள் விநியோகம்

சண்டிலிப்பாய், ஜன. 13

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் எதிர்வரும் தைப்பொங்கல் பண்டிகைக்கான சர்க்கரை, பயறு ஆகிய பொங்கல் பொருள்களை சகாய விலையில் சங்க கிளைகள் ஊடாக பாவனையாளர்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது. அண்மையில் கொழும்பிலிருந்து இச்சங்கத்திற்கு கப்பல் மூலம் மேற்படி பொருள்கள் உட்பட பல பொருள்களும் பால்மா வகைகளும் வந்து சேர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (க-135)

## முத்திரைகள் தாராளம்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ் பிரதம தபாலகத்தில் சகல முத்திரைகளையும் தட்டுப்பாடின்றி பொதுமக்கள் தாராளமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

மாஹோ கப்பலிலும் பெறுமதி மிக்க முத்திரைகள் தாராளமாக வந்துள்ளன என்றும் அவர் சொன்னார். (ஒ-17)

## ரூ. 40 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜன. 13

கசிப்பு உற்பத்தி செய்யும் கோடா 400 கிராம் வைத்திருந்த குற்றத்திற்காக கோணத்திவு புலோலி மேற்கு பருத்தித்துறையைச் சேர்ந்த நபருக்கு, 40,000/- குற்றப் பணமும் 10 மாத சிறைத் தண்டனையும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் நீதியாளர் செல்வி. பிரதீபாவால் தீர்ப்பளிக்கப்பட்டது. (ஒ)

யாழ். ஆஸ்பத்திரியில்

## வெளிநோயாளருக்கு சேவை விரைவாக நடக்கிறது

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தின் நடவடிக்கை காரணமாக வெளிநோயாளர் பிரிவில் தற்போது நோயாளருக்கான சேவை இலகுபடுத்தப்பட்டுள்ளது.

புதிய திட்டத்தால் நோயாளர் எந்தவித தாமதமுமின்றி தமது சிகிச்சையைப் பெற்றுச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

காலை 7 மணியில் இருந்தே வெளிநோயாளர் பிரிவில் நோயாளருக்கு சிகிச்சை அளிக்கும் திட்டத்தை ஆஸ்பத்திரி நிர்வாகம் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளதை அடுத்து நோயாளர்கள் பெரிதும் நன்மை அடைந்துள்ளனர்.

டாக்டர்கள் பற்றாக்குறையான இக்காலத்தில் தினமும் சுமார் ஆயிரத்து ஐநூறுக்கும் குறையாத நோயாளர், புதிய நடைமுறையினால் தாமதமின்றி சிகிச்சையைப் பெற்று விரைவாக வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. (ஒ-15)

## பொங்கல் கலை விழா

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ். திருமறைக் கலாமன்றத்தில் நாளை மறுதினம் ஞாயிறன்று காலை 5.30 மணிக்கு பொங்கல் வைபவமும் —

மாலை 6.45மணிக்கு யாழ், மறை மாவட்ட குருமுதல்வர் அருட்திரு எஸ். ஜே. இம்மானுவேல் அடிகள் தலைமையில் பொங்கல் கலை விழாவும் இடம்பெறவுள்ளன.

விழாவில் வீணை இசை, வாத்திய பிருந்தா, வாய்ப்பாட்டு, சிறப்பு நடனங்கள், பரதம், கதகளி கிராமிய நிகழ்வுகளும் நடைபெறும். (ஐ-51)

## ஆலயங்களில்

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சிவன் கோவிலில் இன்று வெள்ளி காலை 7 மணி முதல் திருவாசக முற்றோதல் நடைபெறும். [ஐ]

## வசாவிளான் ம. ம. வி. பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 13

வசாவிளான் மத்திய மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவும், பெற்றோர் தினமும் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயம் – II கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமியும், சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்வி அபிவிருத்தி கழகத்தைச் சேர்ந்த திரு. க. அருளும் கலந்து கொள்வர்.

விழாவில் முன்னாள் அதிபர்களின் உருவப் படங்கள் திரை நீக்கம் செய்யப்படும். (ஐ-89)

## ஆங்கில பாட கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

வலயம் ஒன்றில் கடமையாற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு எதிர்வரும் திங்களன்று நடைபெற ஏற்பாடாகியிருந்த ஆங்கிலக் கருத்தரங்கு அன்றுநடைபெற மாட்டாது என்றும் —

அந்தக் கருத்தரங்கு எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும் எனவும் வலயம் ஒன்று கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## சினைப்படுத்தும் நிலையம்

சண்டிலிப்பாய், ஜன. 11

சங்கானை கால நடை வைத்திய அதிகாரி பிரிவில் மறி ஆடுகளை சினைப்படுத்தும் நிலையம் ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சண்டிலிப்பாயிலுள்ள சங்கானை கால் நடைவைத்திய அதிகாரி அலுவலகத்தில் ஆடுகளுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்தலும் நடைபெற்று வருகின்றது. (ஒ-135)

## வேலியோரத்தில் இருந்து மீட்கப்பட்ட ஒரு நாள் சிசு!

யாழ்ப்பாணம், ஜன. 13

அநாதரவான நிலையில் காணப்பட்ட ஒரு நாள் பெண் சிசு ஒன்று நேற்று அதிகாலை கண்டெடுக்கப்பட்டு காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை உயரப்புலம் பாரதி அகதி முகாம் பகுதியில் வேலி அருகில் கிடக்கக் காணப்பட்டு அச்சிசு அயல் வீட்டுக்காரரால் மீட்கப்பட்டது.

சிசுவை மீட்டவர்கள் புகார் செய்ததைத் தொடர்ந்து அப்பகுதிக்கு விரைந்த காவல் துறையினர் உடன் விசாரணையை மேற்கொண்டு சிசுவின் தாயைக் கண்டுபிடித்து இருவரையும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளனர். (ஒ-15)

## அயடீன் கலந்த கறியுப்பு உடல்நலத்துக்கு நல்லது

மனித உடல் ஆரோக்கியத்துக்கு, ஊட்டச் சத்துக்கள், கனிப்பொருள்கள் என்பன அவசியமானதாகும். அயடீன் எனப்படும் கனிப்பொருள் உடலில் சேர்க்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்

உடலின் செயற்பாடுகள் சீராக நடைபெறுவதற்கு தைரொயிட் சுரப்பிகளினாலே சுரக்கப்படுகின்ற தைரொட்சின் எனப்படும் ஓமோன் மிகவும் முக்கியமானதாகும். இவ் ஓமோன் உற்பத்தி யாக்கப்படுவதற்கு அயடீன் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்

அயடீன் பற்றாக்குறையினால் உடலில் சாதாரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் வருமாறு:

★ கர்ப்பிணியாக இருக்கும் காலத்தில் ஒரு தாய்க்கு அயடீன் பற்றாக்குறை இருக்குமானால் அவள் பெற்றெடுக்கும் குழந்தை நிறை குறைந்ததாகவும், வளர்ச்சி குன்றியதாகவும் காணப்படலாம். அத்துடன் புத்திக்கூர்மை அற்ற தன்மை, செவிட்டுத் தன்மை என்பனவும் ஏற்பட வாய்ப்புண்டு.

★ பருவமடைந்த பெண்களுக்கு ஒழுங்காக மாதவிடாய் ஏற்படுவதில் பிரச்சினைகள் தோன்றும்.

★ அயடீன் பற்றாக்குறையினால் தைரொயிட் சுரப்பிகள் வீக்கமடைந்து தொண்டையில் கண்டக்கழலை (குவைற்றர்) நோய் ஏற்படும். சிலவேளைகளில் புற்று நோயும் ஏற்படலாம்.

★ தைரொயிட் சுரப்பிகளின் வீக்கம் காரணமாக சுவாசிப்பதற்குச் சிரமம் ஏற்படுவதுடன் சுவாசம் சம்பந்தமான நோய்களும் ஏற்பட வாய்ப்பு உண்டு

இவ்விதம் உடலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து எம்மைப் பாதுகாத்து நாம் சுகதேகிகளாக வாழ விரும்பினால் உணவுடன் அயடீனைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

உணவுடன் அயடீனை எப்படிச் சேர்ப்பது? இதற்கெனவே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உப்பு உற்பத்தி நிறுவனத்தினர் அயடீன் கலந்த மேசையுப்பைத் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

உப்பில் அயடீனைச் சேர்ப்பது இலகுவானதும் பாதுகாப்பானதுமான ஒரு முறையாகும் என்று கண்டறியப்பட்டுள்ளது அத்துடன் உப்பு உணவுடன் கட்டாயமாகச் சேர்க்கப்படும் ஒரு பொருளாகவும் உள்ளது.

கறியுப்புடன் உரிய விகிதாசாரத்தில் அயடீன் கலக்கப்பட்டு, அரைக்கப்பட்டு இம் மேசையுப்புத் தயாரிக்கப்படுகிறது. அயடீன் காற்றோடும், நீரோடும் கலக்கும் தன்மை கொண்டது ஆகலால் அயடீன் கலந்த மேசை உப்புப் பைக்கெற்றுகளைத் திறந்து வைத்திருத்தல் கூடாது போத்தல்களிலே இட்டு இறுக்கமாக மூடி வைத்து உபயோகிக்க வேண்டும். கழுவியோ, காற்றுப்படும்படி வைத்தோ உபயோகிப்பதால் எவ்வித பயனும் இல்லை.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு குறிப்பில் இந்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா தம்பிராசா

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம் புளியந்தோட்டத்தைச் சேர்ந்த கந்தையா தம்பிராசா அவர்கள் 11 - 01 - 1995 இல் சுவிஸில் காலமானார்.

அன்னார் கந்தையா — தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா — பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், அன்னலெட்சுமி (நிலா), சந்திராதேவி (காந்தி), சாரதாமணி (ஆசிரியை - புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), யோகமலர் (சுவிஸ்), தேன்மொழி, காலஞ்சென்ற தர்மசீலன், மற்றும் மாலினி (சுவிஸ்), நிமலராணி, தேவரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பூபாலசிங்கம் (பாலவிநாயகர் ரேடர்ஸ்— கிளிநொச்சி), சோமசுந்தரம் (சுவிஸ்), சண்முகசுந்தரம் (கனடா), சிவசூரியதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருக்கேதீஸ்வரம், மாந்தையைச் சேர்ந்த காலம்சென்ற சண்முகநாதன், மற்றும் கணேசு, குணரட்ணம் (தபால் ஊழியர்), இராசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஐ. பூபாலசிங்கம்
(மருமகன்)

14/6, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.
(34686)

## திருமதி சிவகுமார் சகிலா

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகுமார் சகிலா 11—01—95 இல் கனடாவில் காலமானார்.

அன்னார் து. சிவகுமாரின் (கனடா) அன்பு மனைவியும், சரிகாவின் அருமைத் தாயாரும், தனபாலசிங்கம் தவமணி தம்பதிகளின் அருமை மகளும், கொக்குவில் மேற்கைச்சேர்ந்த மு. துரைராசா - பாக்கியலட்சுமி தம்பதிகளின் அருமை மருமகளும், த. சிவபாலன் (சிங்கோ றேடியோ ரீ. வி. திருத்தகம் மானிப்பாய்), த. சிவானந் (கிரி) (சேரன் மருந்தகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், து. செல்வக்குமார் (பிரான்ஸ்), து. செந்தில்குமார் (நோர்வே), திருமதி ரவீந்திரநாதன் மதிவதனி (கனடா), து. மனோகரி, ரமணி ஆகியோரின் மைத்துனியும், வைஷ்ணவி, விஷ்ணுகா ஆகியோரின் ஆசை அத்தையும், நா. பேரின்பநாயகம் (நியூ சி. கே. பி· ரெக்ஸ்ரைல்), அன்புமலர் ஆகியோரின் பெறாமகளும், க. நடராசா, மனோன்மணி (கொக்குவில்) ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
நா. பேரின்பநாயகம்
(சி. கே. பி.) (சித்தப்பா)
த. சிவானந் [கிரி]
(சகோதரன்)

மானிப்பாய்.
(34687)

## சுப்பையா நாகலிங்கம்

[ஓய்வு பெற்ற ஆசிரியர்]

நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுப்பையா நாகலிங்கம் 06-01-1995 ல் கனடாவில் காலமாகி விட்டார்.

அன்னார் செம்பொற்சோதியின் [கனடா] அன்புக் கணவரும், சிறிகாந்தன் [பிரான்ஸ்], அரவிந்தன் [கனடா], கலாதரன் [ஜேர்மனி], தயாபரன் [சுவிஸ்], கலாயினி [சுவிஸ்], நிருத்தன் [கனடா] ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திரா [பிரான்ஸ்], சாந்தி [கனடா], வசந்தி [ஜேர்மனி], அருள்நிதி [சுவிஸ்], தியாகராஜன் [சுவிஸ்] ஆகியோரின் அருமை மாமனாரும், லவன், யுவன், றஜி, வலன், அரன், பரன், லுஜிதன், விஜிதன், துஜிதன், துஷி, ஜெஷி, ஜஸ்மி, ஜான்சி ஆகியோரின் அன்பு பேரனும், பண்ணாகத்தைச், சேர்ந்த அமரர் சின்னையா தியாகராஜா [ஆசிரியர்] அவர்களின் சம்பந்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருமதி தவமணி தியாகராஜா
(சம்பந்தி)

பண்ணாகம்
சுழிபுரம்.
(34682)

## Dr. A·M கந்தசாமி

[ஆயுள் வேத வைத்தியர்]

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட A. M. கந்தசாமி [ஆயுள் வேத வைத்தியர்] 11-1-95 புதன்கிழமை முகமாலையில் காலமானார். இவர் திருநெல்வேலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற அருணாசலம் மயில்வாகனம் தம்பதியினரின் புதல்வரும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் [அராலி வடக்கு] கணவரும், திருமதி R. சர்வலோசனி, ஜெயபத்மலோசன், ஜெயபிரேமலோசன் ஆகியோரின் அருமைத் தந்தையாருமாவார். இவரது மரணச்சடங்குகள் முகமாலையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

தகவல்:
க. ஜெயபிரேமலோசன்
[மகன்]

[34688]

## திருமதி சோ. வாலாம்பிகைஅம்மா

(புன்னாலைக்கட்டுவன்)

இராசாத்தி அம்மா என்று அழைக்கப்படும் சோ. வாலாம்பிகை அம்மா நேற்று 12-1-95 பி.ப. காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற சிதம்பரநாத ஐயர் சோமசுந்தரசர்மாவின் அன்பு மனைவி ஆவார் அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை (13-01-95) அவரது இல்லத்தில் நடைபெறும்

தகவல்:
சோ. பாலகிருஷ்ணசர்மா
(மருமகன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
சுன்னாகம்.
(34681)

# பாப்பரசர் மணிலா விஜயம்: குண்டுடன் இருவர் கைது!

மணிலா, ஜன. 13

இலங்கை உட்பட நான்கு நாடுகளுக்கான விஜயத்தை ஆரம்பித்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நேற்று பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலா போய்ச் சேர்ந்தார்.

பாப்பரசரின் நான்கு நாள் மணிலா விஜயத்தை ஒட்டி அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாப்பரசரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக கருதப்பட்ட இருவரை நான்கு குண்டுகளுடன் பிலிப்பீன்ஸ் பொலீஸார் கைது செய்துள்ளனர். மேலும் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மற்றும் ஒரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

[ஐ]

# கப்பலில் வந்த பொருள்களில் சடலங்கள் மூடும் உபகரணங்கள்

## தமிழர் ஒருவரால் கொண்டு வரப்பட்டவையாம்

கொழும்பு, ஜன. 13

இங்கிலாந்தில் இருந்து தமிழர் ஒருவரால் கப்பலில் கொண்டுவரப்பட்ட கொள்கலன் ஒன்றில் இருந்து சுமார் 60 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை குற்றப் புலனாய்வு பொலீஸார் கைப்பற்றி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட பொருள்களில் சடலங்களை பாதுகாப்பாக மூடும் உபகரணங்கள் மற்றும் காடுகளில் வசிப்போர் பயன்படுத்தும் சாதனங்கள் என்பனவும் அடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொத்துவில் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்காக இப்பொருள்கள் இங்கு எடுத்து வரப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

(இ-ஐ-6)

# குமரி - வாழப்பாடி அணிகள் என தமிழ் நாடு காங்கிரஸ் பிளவுண்டது

சென்னை, ஜன. 13

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக திரு. குமரி அனந்தன் நேற்றுக் காலை பொறுப்பேற்றார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பதவியேற்பு நிகழ்ச்சியில் — குமரி அனந்தனுக்கு ஆதரவு தெரிவித்து —தமிழக காங்கிரஸின் மூப்பனார் அணியைச் சேர்ந்த தொண்டர்கள் அங்கு திரண்டிருந்தனர்.

அதேவேளை —

தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட வாழப்பாடி இராமமூர்த்தியின் ஆதரவாளர்கள் நேற்றைய பதவியேற்பு வைபவத்தை பகிஷ்கரித்தனர்.

இதன் மூலம் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் உள்ள பிளவு வெட்ட வெளிச்சமாக தெரியவந்துள்ளது என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ராஜீவ் காந்தியால் நியமிக்கப்பட்ட தம்மை பதவியில் இருந்து நீக்கிவிட்டு இந்திரா காந்தி அம்மையாரின் கொடும்பாவியை ஒருமுறை எரித்த குமரி அனந்தனை அந்தப் பதவியில் நியமித்ததன் மூலம் நேரு குடும்பத்தின் மீது தனக்குள்ள வெறுப்பை பிரதமர் நரசிம்மராவ் வெளிக்காட்டியுள்ளார் என்று வாழப்பாடி ராமமூர்த்தி சாடியுள்ளார்.

இதற்கிடையில் —

இம்மாதம் 18 ஆம் திகதி வாழப்பாடி இராமமூர்த்தியின் பிறந்த நாளை கோலாகலமாக கொண்டாட அவரது ஆதரவாளர்கள் முழுமூச்சில் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாழப்பாடி இராமமூர்த்தியின் பிறந்த நாள் விழாவில் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் நாயகனாக முன்னாள் அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் கலந்து கொள்ளவுள்ளார்.

அகில இந்திய காங்கிரஸ் தலைமை தொடர்பான சண்டையை தென் இந்தியாவுக்கும் கொண்டு வருவதே இதன் உள் நோக்கம் என்று கருதப்படுகிறது.

(இ-ஐ)

## ஆளுநராக காமினி பொறுப்பேற்பு

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநராக திரு. காமினி பொன்சேகா இன்று வெள்ளிக்கிழமை பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

(ஐ)

## தமிழீழ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ காவல்துறை கொடியை காவல்துறைப் பொறுப்பாளர் திரு. ப நடேசன்ஏற்றினார். திறப்பு விழாவில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

(ஐ)

## போர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அசம்பாவிதம் எதுவும் இடம்பெறவில்லை என்று கூறிய ஜனாதிபதி, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சனிக்கிழமை நடைபெற உள்ள மூன்றாவது கட்டப் பேச்சுக்களின் போது போர் இடை நிறத்தத்தை நீடிப்பது குறித்து கலந்தாலோசிக்கப்படும் என்றார்.

ஆங்காங்கே நடைபெறும் சிறு சிறு சம்பவங்களை நாம் கவனத்தில் எடுக்கப் போவதில்லை என்றும் —

ஆனால் எந்த ஒரு முறைப்பாடும் விசாரிக்கப்படும் என்றும் —

தற்போதைய நிலைமை மிகவும் நன்றாக உள்ளது என்றும் — ஜனாதிபதி தெரிவித்தார்.

செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதில் அளித்த ஜனாதிபதி —

அரசியல் தீர்வொன்றைத் தயாரிப்பதற்கு முன் அடுத்த சுற்றுப் பேச்சின் பலாபலன்களை தாம் எதிர்பார்த்திருப்பதாகக் கூறினார்.

(இ-ஐ-க-4)


பாரதி
சித்தன்கேணி
Chemistry
A/L 95
மீட்டல்
Mr சிவசோதி
இன்று ஆரம்பம்
4 00 மணி
Spoken English
By
Mr. மைக்ஸ்வேல்
பிரிவு I நடைபெறுகின்றன
திங்கள், வெள்ளி
3 00 மணி.
[7861]


## நேற்று பிலிப்பீன்ஸ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜனாதிபதிராமோஸுடன் துணை ஜனாதிபதி, அமைச்சர்கள், பலநாடுகளின் தூதர்கள், நாட்டின் முக்கிய அதிகாரிகள் மற்றும் கத்தோலிக்க கிறிஸ்தவ உயர் தலைவர்களான கர்தினார்கல், பேராயர்கள். ஆயர்கள் ஆகியோரும் விமான நிலையத்தில் காணப்பட்டனர்,

பாப்பரசரை பிலிப்பீன்ஸின் கலாசார முறைப்படி வரவேற்க கலாசார நடனங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

### 20 ஆயிரம் பொலீஸார்

இதனை கண்டுகளித்த பாப்பரசர் பாதுகாப்பு படையினரையும் மீறிநடன கலைஞர்களின் அருகே சென்று அவர்களைப் பாராட்டினார்.

பிலிப்பீன்ஸ் வரும் எந்தவொரு வெளிநாட்டு தலைவருக்கும் வழங்கப்படாத அளவு கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை பிலிப்பீன்ஸ் அரசு செய்திருந்தது.

சுமார் 20 ஆயிரம் பொலீஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

விமான நிலையத்தின் உள்ளே சென்று பாப்பரசரை வரவேற்க சென்ற பொதுமக்கள், கன்னியர்கள், குருக்கள் அனைவரும் கடுமையான சோதனைக்கு உள்ளானார்கள். இவர்கள் கொண்டுவந்த பிஸ்கட், சொக்களேட், பேனா கூட சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

தான் பாப்பரசராக பொறுப்பேற்றபின் இத்தாலியில் இருந்து வெளிநாட்டுக்கு மேற்கொண்ட 63 ஆவது பயணமான தற்போதைய பயணத்தை மிகவும் முக்கியத்துவம் மிக்க பயணம் என பாப்பரசர் வர்ணித்தார்.

அலித்தாலியா என்னும் இத்தாலிக்கு சொந்தமான தனிவிமானத்தில் பயணம் செய்த பாப்பரசருடன் வெளிநாடுகளைச் சேர்ந்த பல செய்தியாளர்களும் பயணம் செய்தனர்.

விமானத்தில் இச்செய்தியாளர்களிடம் பாப்பரசர் மகிழ்ச்சி ததும்ப உரையாடினார்.

கடந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் உடல்நலம் குன்றிய பாப்பரசர் நடப்பதற்கு தற்போது ஒரு வெள்ளிப்பிரம்பை பயன்படுத்துகிறார்.

கடந்த 9 மாதங்களாக இந்தபிரம்பே பெருந்துணை எனக்குறிப்பிட்ட பாப்பரசர் தமது கால் முழுப்பலம் அடையும்வரை தாம் தொடர்ந்து இதனை பயன்படுத்தப் போவதாகச் சொன்னார்.

விமானத்திலிருந்தே பிரம்பை ஊன்றியவாறு மெதுவாக நடந்த பாப்பரசர் தொடக்கத்தில் மிகவும் களைப்பாக காணப்பட்டார்.

ஆனாலும் மக்களின் கரவொலிக்குப் பின்னரும் வாழ்த்துக்குப் பின்னரும் உரை நிகழ்த்திய போது அவர் உற்சாகத்துடன் காணப்பட்டார்.

(இ-4)

## பாப்பரசரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்பிரயாணத்துக்கான போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை இன்று முதல் அதாவது 13 ஆம், 14 ஆம், 15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் காலை 8 30 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணி வரை சுண்டுக்குளியிலுள்ள தமிழீழ நிர்வாக சேவை பணிமனையில் பெற்றுக்கொள்வதற்கு போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினரால் விசேட செயலக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ)

## அரசியல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டது அல்ல.

இந்த கால எல்லை கழிந்து 72 மணி நேரத்துக்குள் இரு தரப்புகளில் ஒன்று அறிவித்தல் கொடுத்தால் மட்டுமே போர் இடைநிறுத்த அமுல் செல்லுபடியற்றதாக்கப்படும்.

விடுதலைப் புலிகளுக்கும் அரச தரப்பினருக்கும் இடையில் 14 ஆம் திகதி நடைபெற உள்ள பேச்சுக்களில் அரசியல் தீர்வு குறித்தும் ஆலோசிக்கப்படும்.

இப்படி கேர்ணல் அனுருத்த ரத்வத்தை மேலும் தெரிவித்தார்.

(இ-ஐ-க)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா முத்துலிங்கம்

(அச்சுக்கோப்பாளர்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா முத்துலிங்கம் நேற்று காலமானார்.

இவர் சுப்பையா - இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், கந்தரோடையைச் சேர்ந்த திரு. திருமதி தில்லையம்பலத்தின் மருமகனும், அன்னலட்சுமியின் (சரஸ்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகாதேவன் (தேவா). ஜெகதீஸ்வரி (ஜெகதா) ஆகியோரின் அன்புத் தகப்பனும், காலஞ்சென்ற நடராஜன் (ஆசிரியர்) அவர்களின் அன்புத் தமையனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக 13- 01- 95 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
திருமதி அ. முத்துலிங்கம்
(மனைவி)

56/4, இந்துக் கல்லூரி ஒழுங்கை
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(34690)

## முருகேசு சண்முகம்

(உரும்பிராய் கிழக்கு சிவபூத நாதேஸ்வரர் ஆலய பரிபாலன சபைப் போசகர்)

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த முருகேசு சண்முகம் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், தங்கரெத்தினத்தின் அன்புக் கணவரும், றஜனி, நகுலேஸ்வரன் (Germany) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாநாதன் (Canada), சுமதி (Germany) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ் சென்றவர்களான மகேஸ்வரி, மீனாச்சி, பஞ்சலிங்கம், நவசிவாயம் மற்றும் கந்தசாமி (Canada), இராசரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், முத்தையா—தவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமலர் (Singapore), தனலட்சுமி, மங்கயர்க்கரசி, சிவசோதி (Germany), காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் ஜெகதீஸ்வரன் (Canada), பரமேஸ்வரன் (Italy), விக்கினேஸ்வரன் (Canada), காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் இராசையா (Singapore), பராசக்தி (Canada), சற்குணதேவி (Canada), மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற முருகையா மற்றும் ஆறுமுகம், சோதிவேல், தங்கநாயகம் ( Germany ) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை (14-01-95) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(34685)

## வைத்திலிங்கம் சபாரத்தினம்

வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தன்கேணியை வசிப்பிடமாகக் கொண்ட வைத்திலிங்கம் சபாரத்தினம் 11.1.95 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் சிந்தாமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, பாலசுப்பிரமணியம், குணரட்ணம் ஆகியோரின் சகோதரரும், சின்னத்துரை, நவரத்தினம், சீனிவாசகம், விக்கினராஜா, தாமோதரம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், செல்வராஜா (சுபாஸ் விலாஸ் உரிமையாளர்), ஆனந்தராஜா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), சிறீஸ்காந்தராஜா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), லீலாவதி, சிவராஜா (கனடா), லிங்கராஜா (கனடா), மனோகரராஜா (சவுதி), பத்மாவதி ஆகியோரின் தந்தையும், செல்வரதி, தெய்வநாயகி, ரேனுகா, நடராஜா (அபுதாபி), விஜயா, ஜெயவதனி, பாக்கியலட்சுமி, தவேந்திராஜா, லட்சுமிப்பிள்ளை, N S. கந்தசாமி ஆகியோரின் மாமனாரும், சிவகாமிப்பிள்ளை, பாலச்சந்திரன் (வட்டுக்கச்சி மகா வித்தியாலயம்), வசந்தகுமாரி, கனடாவைச் சேர்ந்த கருணாகரராஜா, நித்தியானந்தராஜா, யோகமலர், இரத்தினராஜா, குணராஜா, இரஞ்சிதமலர் ஆகியோரின் பெரியதந்தையாரும், சாந்தி, சர்வேந்திரன், தெய்வேந்திரன், சுரேகா, நிரோஷா, ரயேஸ், தினேஸ், மகிஷா, மதுரா, கனடாவில் இருக்கும் இரவீந்திரன், கிஷானி, பிரதீப், அபிராமி, ஆரணி, குமுதினி, குமணன், நிதர்ஷன், ஜனார்த்தனன் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14.1 95 (நாளை) சனிக்கிழமை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
சிந்தாமணிப்பிள்ளை
[மனைவி]

வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி.
[34691]

## திருமதி செல்லத்துரை பரமேஸ்வரி

பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அராலி மேற்கில் வசித்தவருமான திருமதி செல்லத்துரை பரமேஸ்வரி நேற்று காலமானார்.

அன்னார் சங்கரப்பிள்ளை செல்லத்துரையின் மனைவியும், காலஞ்சென்ற கட்டடப் பொறியியலாளர் இரத்தினத்தினதும், மற்றும் சிவபாக்கியத்தினதும் சகோதரியும், நித்தியானந்தன், அருளானந்தன் (ஜேர்மனி), கிருபானந்தன் (பொறியியலாளர் - லண்டன்) துதிபாலானந்தன் (ஜேர்மனி), மாலினி (லண்டன்), ஆகியோரின் தாயாரும், கலாவதி (யாழ் பல்கலைக்கழகம்), மாலா (ஜேர்மனி), சாந்தி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், ஜனனி, பிரசாந், அஜந், ஆரணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13- 01- 95) நன்பகல் 12 மணிக்கு அராலி மத்தியில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

தகவல்:
செ. நித்தியானந்தன்
[மகன்]

அராலி மேற்கு.
வட்டுக்கோட்டை.
(34692)

... (பிறைவேற்) ... 13-01-1995 இல் அச்சிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org